எண் 245.

# சச்சபுட வெண்பா

(குறிப்புரையுடன்)

14976

தருமபுர ஆதீனம்.

(1951)



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆறாவது ஆண்டு

# குருபூஜை விழா அணிமலர்

13—6—1951.

எண் 245.

உ

குருபாதம்

# சச்சபுட வெண்பா

(குறிப்புரையுடன்)

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்

திருவுள்ளப்பாங்கின்படி வெளியிடப்பெற்றது.

பதிப்பாசிரியர்:

வித்துவான், ச. தண்டபாணிதேசிகர்,

தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரித் துணைத்தலைவர்.

1951.

பிரதிகள் 1000.

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுரம்.

குருபாதம்

# பதிப்புரை.

இசை உயிரில் உணர்ச்சியாகப் புகுந்து இனிக்கும் இனிய தேனொழுக்கு. இரண்டு காது வழியாகவும் தங்கு தடையின்றி ஓடி, உள்ளத்தடாகத்தில் நிறைந்து அன்புத்தாமரையை வளர்க்கும் இனிய நீராறு. ஆற்றிற்குக் கரை அவசியம். கரையில்லா வெள்ளத்திற்கு அழகில்லை; பயனும் இல்லை. இசை வெள்ளத்திற்கும் ஒரு கரை வேண்டும். அதன் கரைகள்தான் தாளங்கள். இடையறாது ஒழுகும் இசைத் தேனொழுக்கில் தனித்த இனிமையை அவ்வப்போது எடுத்துக் காட்டுவன தாளங்களே. அங்ஙனமே கூத்திற்கும், கூத்தின் தோற்றமே தாளங்கள் என்றுகூடச் சொல்லலாம். ஜதியில்லையேல் கூத்து ஏது? ஆனந்தக் கூத்தப் பெருமான் ஊழிக்காலத்து ஒருவராய் ஆடுகின்றார். அவருக்கும் தாளம் வேண்டியிருக்கிறது. தாளம் போடப் பேர்வழி இல்லை. பக்கத்தில் உலகத் தாயாகிய அம்மையொருத்தியே இருக்கிறாள். அவளே தாளம் போடுகிறாள். கூத்து இனிக்கிறது என்கிறது கலித்தொகை.

எங்கும் பரவிச் செல்லும் ஒளியை ஒருமுகமாகச் செலுத்தும் விளக்கு மூடிகள் போல, எங்கும் பரந்துபட்டுச்செல்லும் ஓசையை, ஒழுங்கு

படுத்துவன தாளங்கள். தாள லயமில்லாத இசை உப்பில்லாக் கறிபோல.

தாளம் என்பதில் மூன்று மெய்யெழுத்துக்கள் முறையே இருக்கின்றன. அவை த், ள், ம் என்பன. இம்மூன்றையும் ஊடுருவிப் பிணைத்து நிற்பன அகரவுயிர். இம்மூன்றெழுத்துக்களும் முறையே சிவனும், பார்வதியும், திருமாலும் ஆம். இணைத்து நிற்கும் உயிர் நாதரூபமாகிய பரசிவம். ஆகவே தாளம் என்ற சொல்லிலேயே சிவசக்தியினுடைய தொடர்ச்சியும், அவற்றை ஊடுருவி நிற்கும் பரம் பொருளின் அமைதியும் பொருந்தி யிருக்கின்றன என்று தாள இயல் என்னும் பழந்தமிழ் நூல் சொல்லுகிறது.

தாளம் மாத்திரையை அடிப்படையாகக் கொண்டே வரையறுக்கப்படுவது. மாத்திரையளவு எல்லா இலக்கண நூலுக்கும் ஒருதன்மையாயினவே. தாளத்தைத் தேசீயம், மார்க்கம் என இருவகை யாகப் பகுத்திருக்கின்றார்கள். அவற்றுள் தேசீய தாளம் - அனுதிருதம், திருதம், லகு என்ற மூன்று அங்கங்களால் விரித்தாக்கப்படுவது. அது முப்பத் தைந்து வகையாக இப்போது எல்லாராலும் கை யாளப்பட்டு வருகிறது. மார்க்க தாளம் ஏழு அங் கங்களால் ஆக்கப்பெற்று, நூற்றெட்டு அல்லது நூற்றுப்பதின்மூன்று - நூற்றெழுபத்தைந்துவகை களாக இலக்கணங்களால் இயம்பப்படுவது. ஏழு அங்கங்களாவன முற்கூறிய அனுதிருதம் முதலிய

மூன்ருேடு குருவும், புலுதமும், காகபாதமும், திருத சேகரம் அல்லது லகுசேகரமும் கூட்டி ஆக்கப் பெறு வன. இவற்றை எளிதிற் புரிந்து கொள்ள ஒவ் வொன்றிற்கும் வடிவங்கள் வகுத்திருக்கின்றூர்கள். அனுதிருதம் பிறை போன்ற வடிவையுடையது. இது துடி என்றும், புள்ளி என்றும், விந்து என்றும், விராமம் என்றும் மறு பெயரிட்டு வழங்கப்படுகிறது. திருதம் பூர்ண சந்திர வடிவாய் சுழி, கண், வட்டம், கொம்பு, கணம் என்ற பெயர் களால் அழைக்கப்படுகிறது. லகு என்பது அம் பின் மறுபெயர்களாலும் கீறு, கோடு, நேர் என்ற பெயர்களாலும் வழங்கப்படுகிறது. இந்த மூன்று அங்கங்களும் முறையே கால், அரை, ஒருமாத்திரை களைக் காட்டுவன. குரு என்பது வில்லின் வடி வாகவும் நூல்களிற் குறிக்கப்படுகின்றன. வில்லின் மறுபெயர்களனைத்தாலும் வழங்கப்படுகின்றன. இரண்டு மாத்திரை யறிவிப்பன. புலுதம் என்பது சுருண்ட பாம்புபோன்ற வடிவம் உடையது. ஆதலால் பாம்பு என்றும், அதன் மறுபெயர்களா லும் அழைக்கப்படுவது. மின் என்று சச்சபுட வெண்பா வழங்குகிறது. காகபாதம் என்பது பறவையின் கால்போன்ற வடிவம் உடையது. அதனல் புள்ளடி என்றும் பேசப்படும். இவை முறையே இரண்டு, மூன்று, நான்கு மாத்திரை யளவை யுடையன. இதற்குப்பின் குறிக்கப்பட்ட திருதசேகரம் லகுசேகரம் என்பன, பூர்ண சந்திரனும் பிறையும் கூடியதும், அம்பும் பிறையும்

கூடியதும் ஆகிய அடையாளங்களை உடையன. இவை முக்கால் மாத்திரையும், ஒன்றேகால் மாத்திரையும் அறிவிப்பன. இந்த சப்தாங்கப் பிரஸ்தாரங்களாலேயே இந்நூலில், நூற்றுப்பதின்மூன்று தாள வகைகளும் குறிக்கப்படுகின்றன.

தாளத்தைப் பற்றியனவாக தாளவகையோத்து, தாளசமுத்திரம் என்ற நூற்பெயர்கள், உலரகளால் அறியப்படுகின்றன. அவற்றுள் தாள சமுத்திரம் வெண்பாவால் ஆனது. அது தஞ்சை சரஸ்வதி மஹால் புத்தகசாலையில் இருக்கிறது. தாளவகையோத்து என்பது சூத்திரயாப்பால் ஆனது. சிலப்பதிகார உரையில் பல இடங்களில் மேற்கோளாகக் காட்டப்படுகிறது. அண்மையில், நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா என்னும் நூல் வெளியிடப்பெற்றுள்ளது. இவற்றின் உதவியைக்கொண்டு இந்த நூல் ஓரளவு பரிசோதிக்கப் பெற்றது.

சச்சபுட வெண்பா என்னும் இந்த நூல் நேரிசைவெண்பாவால் யாக்கப்பெற்றது. சச்சபுடம் முதலாகப் பெத்தாபரணம் என்பதிறுதியாக நூற்றுப்பதின்மூன்று தாளங்களினுடைய இலக்கணங்களையும் எடுத்து விளக்குகிறது. ஒவ்வொரு பாட்டிலும் 'ஒன்றாந்தாளமாம்,' 'இரண்டாந்தாளமாம்,' என எண்ணிக்கொண்டே செல்கிறது. ஒவ்வொரு பாட்டின் அடியிலும் தாளங்களின் எழுத்துக் கணக்கும், மாத்திரைக் கணக்கும் தனியாகவும் குறிக்கப்பெற்றுள்ளன.

சச்சபுடதாளத்தை முதலாவதாகக்கொண்டு தொடங்கியிருத்தலின் இந்நூலுக்குச் சச்சபுட வெண்பா என்று பெயரமைந்திருத்தல் வேண்டும். இந்நூலின் பாடற்போக்கு இலக்கணத்தை அறிவிப்பதாக இருந்தும் தங்குதடையில்லாத செப்பலோசையோடு முதல் இரண்டடியிலேயே இலக்கணத்தை முடித்துக்காட்டி, பொருட்செறிவுடன் செல்கின்றது. முதல் ஐந்து பாடல்கள் சச்சபுடம், சாசபுடம், சட்விதா, சம்பொற்கெட்டம், உத்கட்டிதம் என்ற தாளங்களின் இலக்கணங்களை அறிவிக்கின்றன. இவை ஐந்தும் சதாசிவ மூர்த்தியினுடைய சத்யோஜாதம் முதலான ஐந்து முகங்களிலிருந்தும் உண்டாயின என்றும், பிராமணர் முதலாக சங்கிரமசாதி ஈருக ஐந்து சாதிகளைச் சார்ந்தன என்றும் அறிவிக்கின்றன. இசை இலக்கணம் என்னும் நூலில் தாள இயல் என்னும் பகுதி இந்த ஐந்து தாளங்களுக்கும் நிறமும், அதிதேவதைகளும், உலகமும்கூட உள்ளன என்று அறிவிக்கிறது. இந்த ஐந்து தாளங்களே ஏனைய தாளங்கட்கு முதலாயின. இறைவனால் ஆக்கப்பெற்றன. ஏனைய நூற்றெட்டுத் தாளங்களும் முத்தமிழிலக்கண முதல் ஆசாரியனாகிய அகத்திய முனிவரால் விரிக்கப் பட்டன என்று ஒவ்வொரு பாடலிலும் குறிக்கப் படுகின்றது. சிலபாடல்களில், அகத்தியருக்குவேதாசாரியனாகிய பிரமன் மொழிந்தானென்றும் பேசப் பட்டுள்ளது. இந்நூல் பத்தொன்பது ஏடுகளை யுடையது. பதினொராம் ஏடு இல்லாமையால் ஆறு

தாளங்களின் பெயரும் இலக்கணமும் அறியக்கூட வில்லை. இதனோடு ஒப்புநோக்க வேறு பிரதிகள் இல்லாமையால், அப்பாடல் விடுபட்டன. பின்னர், அடியேனது ஆசிரியப் பெருந்தகையாகிய, தாக்ஷிணாத்ய கலாநிதி, மகாமகோபாத்யாய பிரமஸ்ரீ சாமிநாத ஐயர் அவர்களது அடையாற்றுப் புத்தக சாலையில் ஒரு ஏடு இருப்பதாக அறிந்தேன். அதனோடு ஒப்புநோக்கி யடைந்த திருத்தங்களும் பிறவும் அடுத்த பதிப்பில் வெளிவரும்.

இவ்வேட்டின் முதற்கண் புதியதொரு ஏட்டில் ‘ஆளவரும்’ என்னும் முதற்குறிப்பையுடைய காப்பு வெண்பா எழுதப்பெற்றுள்ளது. எழுத்தும் ஏடும் மிகப்புதியன. இவ்வெண்பா தாளசமுத்திரத்தின் காப்புச் செய்யுளென்பது வெளிப்படை. நூலின் இறுதியில் உள்ளது,

> “பெத்தா பரணம் பிறங்குகலை மின்கோலே
> தித்தாவி மாத்திரையும் அஞ்சே -முத்தாலந்
> தோன்று முனிதாளம் சொல்நூற்றுப் பத்துடனே
> மூன்றும் முசிந்தது முற்று”.

என்ற பாடல். பெத்தாபரணத் தாளத்தோடு நூற்றுப் பதின்மூன்று தாளங்களின் இலக்கணம் முடிந்தது என்றமையால், சச்சபுடம் முதலாகப் பெத்தாபரணம் இறுதியாக நூற்றுப் பதின்மூன்று வெண்பாக்களை யுடையதே இந்நூல் என்பது தெளிவு. ஆதலால், தனியே ஒரு காப்புச்செய்யுளை இந்நூல் பெற்றிருக்க முடியாது. அன்றியும்

கொன்றைவேந்தன், ஆத்திசூடி என்பனபோல, கடவுள் வாழ்த்துப் பெற்றிருப்பின், '.ஆளவரும்' என்பதையே இந்நூலுக்குப் பெயராக அமைத்திருப்பார்கள். ஆதலால் இந்நூலுக்குக் காப்பு இல்லாமை தெளிவு.

இந்நூலைச் செய்தவர், முதனூல் இவற்றையறிவிக்கும் சிறப்புப்பாயிரச் செய்யுளொன்று இவ்வேட்டின் இறுதியில்,

"பரகுண மாமுனி வன்பகர்ந்த சூத்திரத்தை
வரகுண ராமன் வகுத்தே—திரமுறவே
வெண்பா எனஉரைத்தான் வேதர்கோ னிப்புவியில்
பண்பாக வேபடித்துப் பார்"

என்று காணப்படுகிறது. இதனால் இந்நூல் செய்தவர் வரகுணராமன் என்றும், இதன் முதனூல் அகத்திய சூத்திரம் என்றும் அறியப்படுகிறது. வரகுணராமன் என்பார் பிற்காலப் பாண்டியர்களுள் புலவர் திலகமாகிய வரதுங்கராம பாண்டியரது மகனராவர். இவரும் இவர் தந்தைபோல, கலைஞானம் படைத்தவராய் இசைக்கலையில் தனிப்பெருமை உற்றிருந்தாரென்றும் துணியலாம். அங்ஙனமாயின் இந்நூலின் காலம் கி. பி. 1613-க்குப் பிற்பட்டதாகும். இந்நூலின் முதனூல் அகத்திய சூத்திரம் என்பது இதனால் மட்டுமன்றி ஆதிதாளம் முதலாகச் சொல்லப்படும் நூற்றெட்டுத் தாளங்களின் இலக்கணங்களைக் கூறும் ஒவ்வொரு

வெண்பாவிலும் அறிவிக்கப் படுகிறது. அகத்தியர் முத்தமிழிலக்கணங்களைத் தம்முட் கலந்து இயற்றினரென்றும், அவைகளை அந்தந்தத் துறையில் சிறந்த மாணவர்கள் பயின்றார்கள் என்றும், வழி நூல்கள் செய்தார்கள் என்றும் வரலாறு கூறும். சிலப்பதிகாரத்தில் உரைச் சிறப்புப் பாயிரத்துள் தேவ இருடியாகிய அகத்தியர் இசைத்தமிழுக்கு ஆசாரியனென்றும், அவரிடத்தில் சிகண்டி என்ற முனிவர் இசை நுணுக்கங்களைப் பாடங் கேட்டார் என்றும், அச்சிகண்டியே அநாகுலப் பாண்டியன் குமாரனாகிய சாரகுமாரனுக்காக இசை நுணுக்கம் என்ற நூலை இயற்றினரென்றும் தெரியக் கிடக்கின்றது. ஆதலால் அகத்திய சூத்திரமே இந் நூலுக்கு முதனூலாம் என்பதில் ஐயம் இல்லை.

இந்நூலுள், தாளவகைகளை எழுத்தெண்ணவும் அலகிடவும் பயன்படக் கூடியதாகப் பரிபாஷைச் சொற்களையே பயன்படுத்தியிருக்கிறது:

உதாரணமாக, சச்சபுடதாளத்தின் இலக்கணமாகிய இந்த வெண்பாவைப் பாருங்கள்:—

"சச்சபுடம் ரண்டு தனுக்கோல் புலுதமுடன்
இச்சைபெறு மாத்திரையும் எட்டாகும்—அச்சமற
ஈசன்முக மேற்குமுகத் தேளமுந்து வேதர்குலத்
தாசையிலொன் றுந்தாள மாம்".

இதில் இரண்டு தனு, கோல், புலுதம் என்ற குறியீட்டுச் சொற்கள் ஆளப்படுகின்றன. தனு என்பது இரண்டு மாத்திரை பெறும் குருவைக் குறிப்பதாகும். கோல் என்பது அம்பாகிய லகுவைக் குறிப்பதாகும். புலுதமென்பது மூன்று மாத்திரை பெறும் அளபெடையாகிய பாம்பைக் குறிப்பதாகும். ஆக இரண்டு வில்லாகிய நான்கு மாத்திரையும், கோலாகிய ஒரு மாத்திரையும், புலுதமாகிய மூன்று மாத்திரையுங்கூட எட்டு மாத்திரையால் விளங்குவதித்தாளம். இவ்வாறே சில பாடல்களில் நகணம், மகணம் முதலான எட்டு கணங்களால் எழுத்தையறிவித்து மாத்திரையைக் கணக்கிட்டுச் செல்கிறது இந்நூல்.

இப்போது வெளிவந்த நூல்களுக்கும், இதற்கும் தாளப்பெயர் வகையிலும், மாத்திரை வகையிலும், எழுத்துக்களை அமைக்கும் வகையிலும் பதினெட்டுக்கு மேற்பட்ட இடங்களில் மாறுபாடான கருத்துக்கள் காணப்படுகின்றன. 'சம்பொற்கொட்டம்' என்பதனைத் தாளவியல் 'சம்பத்துவேட்டம்' என்று அழைக்கின்றது. தாளக்கலிவெண்பா 'சம்பொற்சட்டம்' என்று அழைக்கிறது. தாளக்கலிவெண்பாவிற் காணப்படும் அந்தரக்கிரீடை, மல்லிதாளம், அனங்கம், தீபகம், விஷமதாளம், நந்திதாளம் என்பன ஏட்டில் காணப்படவில்லை. இவை ஒருசமயம் இல்லாத ஏட்டில் இருந்திருக்கலாம். ஆனால் ஏட்டில் காணப்படுகின்ற காருதி,

வர்த்தனை, திரிமாத்திரிகை, கந்துகம், அந்திமுட்டிகை, சங்கை, மதி என்ற தாளங்களும் அவற்றின் இலக்கணமும் கலிவெண்பாவிற் கூறப்பெறவில்லை. ஆதலால் இவை அவற்றிற் புதியனவாகவே கொள்ளக் கிடக்கின்றன.

இவையன்றி, தாளக்கலி வெண்பாவிற்கும் இந்நூலிற்கும் இலக்கணத்திலும் மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. உதாரணமாக ஜெயதாளம் ஒன்பதுமாத்திரை யுடையதாக இந்நூல் அறிவிக்கிறது. பத்து மாத்திரையாகக் கலிவெண்பா காட்டுகிறது. திஸ்ர வர்ணத்திற்கு அஞ்சரை மாத்திரை என்கிறது கலிவெண்பா. ஆறு மாத்திரை என்கிறது இந்நூல். இதுபோலப் பலவிடங்களில்.

இவ்வாறாக, தாளத்தின் வகைகள் மிகச் சிறந்த முறையில் கூறப்பட்டுள்ளன. இடைப்பட்ட காலத்தில் தமிழ் மொழியில் இருந்த நல்ல இசை நூல்கள் மறைவிடத்தை நாடியமையால் இசையின் நுணுக்கங்கள் இன்று புதியனவாகக் காட்சியளிக்கின்றன. தேசியத் தாளங்கள் இசைவானத்தில் இலங்கத் தொடங்கிவிட்டன. இந்த நூலும், தாள சமுத்திரமும் வெளி வருமானல் தாளவகையில் தமிழிசை மிக மிகப் புதியதொரு விழிப்பை அடையும்.

இந்த ஏடு தருமையாதீனத்துப் புத்தகசாலையில் இருந்து எடுக்கப்பெற்றது. இதனை ஒப்புநோக்க வேறு ஏடு கிடைக்குமா என்ற ஆவலுடன் 'சலியாத

கற்பதரு'வாகிய தஞ்சை சரஸ்வதிமாலை யடைந்தேன். அங்கு தாளசாஸ்திரம் என்ற பெயருடைய நூலொன்று கிடைத்ததேயன்றி இந்நூல் கிடைக்கவில்லை. அப்போது எனக்குண்டான ஏமாற்றத்தை யறிந்த, எனது அரும்பெறல் நண்பரும், சரஸ்வதி மால் புத்தகசாலை யாராய்ச்சிப்பேராசிரியரும் ஆகிய திரு. R. வாசுதேவ சாஸ்திரிகள் அவர்கள் இந்த நூல் முழுமையும் படித்துக் காட்டும்படி பணித்தார்கள். இதிற்கூறிய இலக்கணம் முழுமையும் பரதசாஸ்திரம், ஆதிபரதம், குகேச பரதார்ணவம் என்ற வடமொழி நூல்களோடு ஒத்திருப்பதையும், முறை வைப்புங்கூட அப்படியே அமைந்திருப்பதையும் காட்டினார்கள். அதனையும் இவற்றினடியில் சேர்த்தால் நலமாகும் என்று எண்ணி இந்நூலின் ஒவ்வொரு தாளத்தின் அடியிலும் சேர்த்துள்ளேன். இந்த மூன்று வடநூல்களால் சச்சபுட வெண்பாவின் உண்மையான பாடங்களும் முறைவைப்புக்களும் நன்கு அறிந்து திருத்தப் பெற்றன. இசைப் பேரறிஞர்கள் உலகிற்குப் பயன் படுத்துவார்களாக.

இந்நூல் வெளிவருவதற்கு வேண்டிய அனைத்துதவிகளையும், ஆராய்ச்சிக்கு வேண்டிய எல்லா வகையான உதவிகளையும் செய்து ஊக்கியவர்கள், பெருங்கொடை வள்ளலும் செந்தமிழ்த் தெய்வ நூல்களனைத்தும் தமிழ்மக்கள் ஒவ்வொருவருடைய கையிலும் விளங்கவேண்டும் என்ற பேரருட்டிறம்

படைத்தவர்களும் தமிழ்நூற் பதிப்புக்கள் மிக உயர்ந்த காகிதத்தில், சீரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் வெளிவந்து தனி மதிப்பை விளைவிக்க வேண்டுமென்ற விரிந்த உள்ளம் படைத்தவர்களும் ஆகிய திருக்கைலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். அவர்கள் ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றும் பணிகள் அளவிலாதன என்பதையும், அழகான பணிகள் என்பதையும் தமிழுலகமே அறிந்து போற்றி வருவதால் 'அங்கணோர் தம் புவனத்தில் அறியாதார் யாருளரே' என அமைகின்றேன்.

இந்நூல், இவ்வாதீனத்து 24-வது குருமூர்த்திகளாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜை விழா மலராக வெளிவருகிறது.

இதனை இயற்றமிழ்ப் புலவர்களும் இசைத் தமிழ்வாணர்களும் ஏற்றுப் பயன் பெறுவார்களாக.

தருமபுரம்
2—6—51,

ச. தண்டபாணி

குருபாதம்

# முகவுரை

சச்சபுட வெண்பா என்னும் இந்த நூல் பழையதோர் தாளசாஸ்திரம். தாளங்கள், 'மார்க்கம்', 'தேசி', என இருவகைப்படும். 'மார்க்கம்' என்பது ஆதியில் சிவபிரானால் நந்திகேசுவரர்க்கு உபதேசிக்கப்பட்ட ஐந்து தாளங்களாகும். இவ்வைந்து தாளங்களுக்கும் இவற்றின் அங்கங்களாகிய குரு, லகு, ப்லுதம் (குறில், நெடில், அளபெடை) இவற்றின் வரிசையைக் காட்டக்கூடியபடி பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. முதல் தாளத்தின்பெயர் சச்சத்புடம் (चच्चत्पुटम्). இதில் முறையே குறில் ஒற்றடுத்ததும், பிறகு மற்றொரு குறில் ஒற்றடுத்ததும், பிறகு ஓர் தனிக்குறிலும், கடைசியில் ஒரு மகர ஒற்றும், அமைந்திருக்கின்றன. இவற்றுள் மகர ஒற்றை அளபெடையாக மூன்று மாத்திரை நீட்டி ஓர் ப்லுதமாக உச்சரிக்கவேண்டும். அப்போது இந்தத்தாளத்தின் அங்கங்கள் குரு, குரு, லகு, ப்லுதம் (ட ட । ஃ) கொண்ட எட்டுமாத்திரை என்று தாளத்தின் பெயரைக் கொண்டு குறிப்பாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளலாம். இதேவிதமாக இரண்டாவது தாளமாகிய சாசபுடம் (चाचपुटम्) என்பது ஒரு குரு,

ஒரு லகு, ஒரு லகு, ஒரு குரு என்ற அங்கங்கள் கொண்ட ஆறுமாத்திரை என்பது அதன் பெயரிலேயே குறிப்பிடப்படுகிறது. இதில் கடைசி ஒற்றுக்கு அளபெடை இல்லையென்பதும் கவனிக்கத் தக்கது. இதேவிதமாக மற்ற மூன்று தாளங்களாகிய ஷட்பிதாபுத்ரகம் (षट्पितापुत्रकम्), ஸம்பக்வேஷ்டாகம் (संपक्वेष्टाकम्), உத்கட்டம் (उद्घट्टम्) என்ற தாளங்களின் உருவங்களும் பெயரினால் குறிப்பிடப்படுகின்றன.

இந்த ஐந்து தாளங்களுள் முதல் தாளமாகிய சச்சத்புடம் என்பது சதுரச்ரஜாதிக்கான தாளம். அதாவது இதன் நடை நந்நான்காக இருக்கும். இந்த தாளத்தில் இரண்டு நான்குகள் கொண்ட எட்டு மாத்திரைகள் இருப்பது கவனிக்கத்தக்கது. மற்ற நான்கு தாளங்களும் திரியச்சிர ஜாதியைச் சேர்ந்தன. அதாவது இவற்றின் நடை மும்மூன்றாகவரும்.

பிறகு சதுரச்ரம், திரியச்ரம் என்ற இரண்டு ஜாதிகளின் எண்களையும் சேர்த்துக்கூட்டி எவ்வேழாக நடையுள்ள மிச்ரம் (கலந்தது) என்ற ஜாதி ஏற்பட்டது.

அதன் பிறகு சதுரச்ரம், திரியச்ரம், மிச்ரம் இந்த ஜாதிகளைப் பல பகுதிகளாக்கிப் பலவகையாகச் சேர்க்கப்பட்ட சங்கீர்ண ஜாதிகள் (பலவகைக் கலப்புள்ளவை) உண்டாயின. அவற்றுள்

சதுரச்ரம், திரியச்ரம் என்ற 4, 3 என்ற எண்களில் ஐந்தைத் துண்டுசெய்து அதில் இரண்டை மூன்ருேடு சேர்த்து ஐந்தாக நடையுள்ள ஜாதி முதலில் ஏற்பட்டது. இதற்குக் கண்டம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. மற்றவகை நடையுள்ளவைக ளெல்லாம் 'ஸங்கீர்ணம்' என்ற பொதுப்பெயரால் அழைக்கப்பட்டன. ஸங்கீர்ண ஜாதிகளில் 5, 9, 11 முதலிய பல எண்களுள்ள நடைகள் கற்பனை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் தாளங்கள் இவ்வளவே. ஒவ்வொரு தாளத்தையும் அதன் அங்கங்களாகிய லகு முதலிய உறுப்புகளின் கலைச் சவுக்கத்தை அதிகப்படுத்தி இரண்டுகலை, நான்கு கலை, எட்டு கலை, பதினாறு கலை முதலிய கலை களில் தாளங்களை அமைத்து, பலவகை உட்பிரிவு களையும் உண்டாக்கியிருக்கிறார்கள். ஆனால் பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் இவற்றிற்குத் தனியான பெயர்கள் கிடையாது. இத்தாளங்களைக் கொண்டு தாளப்பிரபந்தங்கள் என்ற கீதங்கள் உண்டாக்கப் பட்டன. தாளங்களின் பல அம்சங்களைச் தசப் ராணன்கள் என்ற பெயரால் விவரித்திருக்கிறார் கள். அவையாவன:—

1. **காலம்;** அதாவது கால அளவை.

2. **மார்க்கம்:** அதாவது நாட்டுக்கு நாடு மாறு படும் தாளநடை.

3. க்ரியா: அதாவது காலத்தை அளக்கும் தட்டு, வீச்சு முதலியன.

4. அங்கம்: ஒவ்வொரு தாளத்தையும் தொகுக்கும் கால அளவை உறுப்புகள். லகு, குரு, ப்லுதம் முதலியன.

5. க்ரஹம்: அதாவது தாளத்தின் எந்த இடத்தில் பாட்டு ஆரம்பிக்கப்படுகிறதோ அந்த 'இடம்' அல்லது 'எடுப்பு'.

6. ஜாதி: ஒவ்வொரு தாளத்திலும் உள்ள அங்கங்களின் உள்நடை.

7. கலை: தாளங்களின் அங்கங்களின் அக்ஷர காலங்களைப் பெருக்கிப் புதிய உட்பிரிவுகள் அமைக்கும் விதம்.

8. லயம்: தாளத்தின் வேகம், அதாவது துரிதம், விளம்பம் முதலிய கதிகள்.

9. யதி: அதாவது தாளத்தின் விளம்பம், துரிதமுதலிய கதிகளை அழகாக அமைக்கும் முறை.

10. ப்ரஸ்தம்: அதாவது ஒரே தாளத்தில் அங்கங்களைப் பலவகையாக அமைக்கும் வரிசைக் கிரமம்.

இதுவே நமது நூல்களில் மார்க்கதாளங்களைப் பற்றிக் கிடைக்கும் விவரங்கள்.

பிறகு ஏற்பட்டவை தேசீ தாளங்கள். இவை பலரால், பல இடங்களில், பல பெயர்களோடு கற்பனை செய்யப்பட்டவை. இவைகளை 108 தாளங்கள் என நிச்சயித்து, அவற்றின் பெயர்களையும் நிச்சயித்தது நர்த்தன நூலாசிரியர்களே என்று தெரிகிறது.

நம்நாட்டில் **பரதநாட்டியம்** என்று வழங்கப்படும் கலையில் **அபிநயம், நர்த்தனம்** என்ற இரண்டு பிரிவுகள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. மனதில் உள்ள எண்ணத்தைப் பிறருக்குத் தெரிவிப்பது அபிநயம். இதற்கு வேண்டிய உபகரணங்கள் பேச்சிலும், பாட்டிலும் உள்ள சொற்களும் கை, கண், உடம்பு முதலிய அங்கங்களில் காட்டப்படும் ஜாடைகளும் ஆகும். இதற்குத் தாளம் முக்கியமான அம்சம் அல்ல. ஆனால் பாடல்கள் அர்த்தபாவத்துக்குத் தகுந்த மெதுவான அல்லது துரிதமான நடையுள்ள தாளங்களில் அமைக்கப்படல் வேண்டும். **நர்த்தனம்** என்பது உள்ளப் பூரிப்பின் வெளிப்படை உருவம். பாட்டும் கூத்தும் உவகையின் இடமாகப் பிறப்பன. அக்காரணம் பற்றியே உவகையை ஊட்டுவன. நர்த்தனத்திற்கு மனதிலுள்ள தெளிவான எண்ணங்களோ, சொற்களோ வேண்டியதில்லை. தாளத்தில் ஈடுபட்டு, கால் கை முதலிய அங்கங்களின் அசைவுகளைத் தாளத்தின் போக்கில் லயிக்கும்படிச் செய்வதே நர்த்தனத்தின் மார்க்கம். ஆகவே தாளமே நர்த்தனத்தின் உயிர். இக்காரணம் பற்றியே தாளத்தின்

நுண்ணிய அம்சங்கள் நந்திபரதம்முதலிய நர்த்தன நூல்களிலும், நாட்டியாசாரியர்களிடமும் (நட்டுவ ஞர்கள்) விசேஷமாகக் காணப்படுகின்றன. நர்த்தனம், அபிநயம் என்ற இரண்டு கலைகளுக்கும் முறையே சிவபெருமான், பிரும்மா இவர்கள் மூதலாசிரியர்கள். அவர்களிடம் பயின்ற முதல் மாணுக்கர்கள் முறையே நந்திகேசுவரரும், பரதரும் ஆவர். சிவபெருமான் ஆக்ஞையால் பரதருக்கு நந்திகேசுவரரால் நர்த்தனம் சொல்லிக்கொடுக்கப்பட்டது. இதனுல் நர்த்தனமும் அபிநயமும் சேர்ந்த பரத நாட்டியக்கலை உருவாயிற்று. (பரதநாட்டிய சாஸ்திரம். 1. 4. அத்தியாயங்களில் இதன் விரிவான வரலாற்றைக் காண்க.)

ஆகையால் 108 தாளங்களும் முதல் முதல் விரிவாக விவரிக்கப்பட்டிருக்கும் நூல் பரதர்நாட்டிய சாஸ்திரமல்ல. நந்திகேசுவரரால் இயற்றப்பட்ட நர்த்தன சாஸ்திரமாகிய பரதார்ணவம் (சரஸ்வதி மகால் நகல் நூல் நெ. 387.) என்ற நூலேயாகும். இந்நூல் 4000 சுலோகங்கள் கொண்டது என்று பரதார்ணவ ஸங்க்ரஹம் (சரஸ்வதி மகால் B. நெ. 11521.) என்ற மற்றொருநூலில் கூறப்பட்டிருக்கின்றது. பரதார்ணவத்தின் 4-வது அத்தியாயம்முதல் 15-வது அத்தியாயம்வரையிலுள்ள பகுதி சரஸ்வதி மகாலில் இருந்துவருகின்றது. அதிர்ஷ்டவசமாக தாளத்தைப் பற்றியது 7-வது அத்தியாயமாக அமைந்திருக்கிறபடியால் தாளாத்யாயம் நமக்குக்

கிடைத்திருக்கின்றது. பிற்காலத்திய நூல்களுள், சங்கீதரத்னாகரத்தில் 108 தாளங்கள் விரிவாகக் காணப்படுகின்றன. ஆனால் இவ்விரண்டு நூல்களிலும் தாளங்களின் வரிசையும், சிற்சில தாளங்களின் உருவமும் வேறுபட்டிருக்கிறது. நமது சச்சபுட வெண்பா என்னும் தமிழ்நூல் பரதார்ணவத்தையே முற்றிலும் அனுசரித்திருக்கிறது. இத்தாளவரிசை கள் மிகப் பழைய நர்த்தன நூல்களின் பகுதிகளால் தொகுக்கப்பட்ட (B. 11521, 22, 34, 42.) ஆதிபரதம் என்னும் மற்றொரு நூலிலும் காணப்படுகிறது. இந்த ஆதிபரதம் என்னும் தொகுப்புநூலில் ஆதியில் பரம சிவனால் பார்வதிதேவியாருக்கு உபதேசிக்கப்பட்ட விரிவான சங்கீத நாட்டிய நர்த்தனநூல் ஒன்று 'ஆதிபரதம்' என்றபெயரால் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலிருந்தும் சிலபகுதி கள் அத்தொகுப்பு நூலில் சேர்க்கப்பட்டிருக்கிற படியால் அதற்கும் ஆதிபரதம் என்றபெயர் இடப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இதிலுள்ள 108 தாளவரிசை பரதார்ணவத்தை ஒத்திருக்கின்றது.

சரஸ்வதி மஹாலிலுள்ள மேலே சொன்ன இரண்டு மிகப்பழைய அரியரத்தினங்கள் போன்ற நூல்களும் சச்சபுட வெண்பாவைச் சரிபார்த்துத் திருத்துவதற்கு மிகவும் உபயோகமாயிருந்தன.

தாளத்தைப்பற்றிய மற்றொரு தமிழ்நூலாகிய 'தாள ஸமுத்ரம்' என்னும் நூல் சரஸ்வதி மஹா லில் பதிப்பிக்கப்பட்டு வருகிறது. அதில் கிடைத்

இருப்பது அதன் முதற் பகுதியாகிய முதல் 50 பாடல்களேயாகும். அதே சுவடியில் ந்ர்த்தனத்தைப் பற்றிய பரதர் நூலின் சிலபகுதிகள் காணப்படுகின்றனவேயன்றி 108 தாளத்தைப் பற்றிய விவரம் கிடைக்கவில்லை. கிடைத்த பகுதியில் தாளங்களின் தசப்ராணம் என்று சொல்லக் கூடிய அம்சங்களாகிய காலம், மார்க்கம், க்ரியா, அங்கம், ஜாதி, கலை, க்ரஹம், லயம், யதி, ப்ரஸ்தாரம் என்ற பத்தும் விவரமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கடுத்தாற்போல் உள்ள பகுதிகளில் மார்க்க தாளங்களும், தேசீ தாளங்களும், தாளப்ரபந்தங்களும், ப்ரஸ்தாரவழிகளும் கூறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்தப்பகுதி நமக்குக் கிடைக்கவில்லை. தாள சமுத்திரத்தில் கிடைத்திருக்கும் பகுதியும் சச்சபுட வெண்பாவும் சேர்ந்தால் ஒருவாறு தமிழிலுள்ள பழைய தாளசாஸ்திரம் உருவாகும்.

சச்சபுடவெண்பாவை வெகு சிரத்தையுடன் பாடுபட்டு, அதற்கு வேண்டிய உதவிகளைத் தேடிப் பதிப்பிப்பதில் ஈடுபட்டிருக்கும் திரு. ச. தண்டபாணி தேசிகர் இவ்வரிய தொண்டினால் தமிழ் உலகத்திற்குப் பெரியதோர் உதவி புரிந்திருக்கிறார். இவரைப்போல ஆராய்ச்சியில் நுட்பமும், சிரத்தையும் ஆர்வமும் ஆராய்ச்சிக்கு வேண்டிய ஸம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளில் பயிற்சியும், சொல்லுவதற்கு முன் கலைகளின் நுட்பங்களைக்கிரஹிக்கும் சக்தியும்

ஒருங்கே காண்பது அரிது. இவர் இன்னும் பல இலக்கணம், இலக்கியம், சமயம், கலைகள் முதலிய பலவகை நூல்களை ஆராய்ச்சி செய்து நம் நாட்டினருக்கு உதவுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

தருமபுர ஆதீனகர்த்தராகிய மஹாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் நம்முடைய ஒப்புயர்வற்ற கலாசாரத்திற்கும் சமயத்திற்கும் புத்துயிரளிப்பதற்காகக் கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி போன்ற வித்யாஸ்தாபனங்களையும், பிரசாரங்களையும், நூல்நிலையங்களையும், ஆராச்சியாளர்களையும் ஏற்படுத்தியிருப்பதோடு, பலவகை நூல்களையும் பதிப்பிக்கவும் ஏற்பாடு செய்திருப்பது நம் நாட்டினர் யாவரும் நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் பாராட்டிப் பெருமைப்படத்தக்க விஷயம். அவர்கள் இத்துறையில் இன்னும் பல அரிய உபகாரங்களை நம் நாட்டினர்க்குச் செய்வதற்காக அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் அரோக திடகாத்திரத்தையும் அருளுமாறு இறைவனை வேண்டுகிறேன்.

சரஸ்வதிமஹால்
தஞ்சாவூர், } K. வாசுதேவசாஸ்திரி.

குருபாதம்

# பாராட்டுரை

பண்டைய தமிழ்ப்பெருமக்கள் அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரும் பெருந் தொண்டுகளாற்றி வந்துள்ளனர். இயல் இசை நாடகம் எனவழங்கும் மூத்தமிழில் இசை நடுநாயகமாய் விளங்குவதினின்றே அதன் பெருமையை நாம் நன்கு உணரலாம். மேலும், பகுத்தறிவற்ற விலங்கினங்களுங்கூட இசையில் மயங்கும் தன்மையுடையன என்றால் மானிடராய்ப்பிறந்த நமக்கு அதன்பால் எத்துணை ஈடுபாடு இருத்தல்வேண்டும்.

இசைத்தமிழுக்கு உரிய இலக்கண நூல்கள் பண்டையகாலத்தில் பல இருந்து ஒழிந்தன என்று சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர் (அடியார்க்கு நல்லார்) வாயிலாகப் புலப்படுதலானும், அவ்விசை இலக்கண நூல்களின் விதிகளைப் பின் பற்றியே பின்னர் இசைத்தமிழ் நூல்கள் இயற்றப் பட்டும் பயிலப்பட்டும் வந்தன என்று அரங்கேற்றுக் காதை யுரையால் அறியக் கிடத்தலானும், சில நூற்றாண்டுகட்கு முன் தோன்றிய சங்கீத இரத்தினகரம் முதலிய வடநூலாசிரியர்களும்

பிறரும் தமிழிசையின் இயல்களைத் தழுவியே தத்தம் நூல்களை வெளியிட்டிருத்தல்வேண்டுமெனத் தெரிகிறது. வடமொழி, தென்மொழி இசைநூல்களிடையே பெயரளவில் மாறுதல்களிருப்பினும், அடிப்படை இலக்கணங்களில் கருத்துவேறுபாடு அதிகம் காணப்படவில்லை.

பொதுவாக இசைக்குச் சுருதியைத் (கேள்வி) தாயாகவும், இலயத்தைத் தந்தையாகவும் கூறுதல் மரபு. இதிலிருந்து இசை பயில்வோருக்குக் கேள்வி அறிவும், இலய அறிவும் எத்துணை இன்றியமையாதவை என்பது பெறப்படும். தந்தையின் உதவி மகனைக் கற்றோரவையத்து முந்தியிருக்கச் செய்தலே போல், இசைக்கலைஞன் இலய ஞானத்தின் துணை கொண்டு சிறந்த புகழெய்துகிறான். இலயமாவது கால அளவைக் குறிக்கும். அதாவது தாளத்தை ஒரே அளவாக நடத்திக்கொண்டுபோவதும், அதே அளவை இரட்டிப்பதும், அதை இரட்டிப்பதும் ஆகிய இவைகளைக்குறிக்கும். இலயம் இல்லையெனில் தாளத்திற்கு விளக்கமும் பெருமையும் இல்லை; எனவே இலயம் தாளத்தின் உயிர் நிலையாய் விளங்குகிறது. அன்றியும் இயற்கையிலேயே இது நம் அன்றாட வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு சம்பவங்களிலும் பிணைந்துள்ளது. உதாரணமாக ஆடைகளைத் தோய்க்குங்கால் தொடர்ந்து உண்டாகும் ஓசைகளைக் கவனித்தால் அவை சமகால இடைவெளியிட்டு எழுதலை உணரலாம். இதேபோல்

உரலில் நெற்பெய்து மகளிர் எதிர்நின்று குற்றும் போதும், அங்ஙனம் குற்றியதைச் சுளகுகொண்டு புடைக்கும் போதும், கொல்லன் உலைக் கூடத்தில் சம்மட்டிகொண்டு அடிக்கும்போதும், சேணியன் துணி நெய்யும்போதும் இன்னும் குதிரை ஓடும் போதும், புகைவண்டி செல்லும்போதும் கடல் அலைகள் வீசும்போதும் எழுகின்ற ஓசைகளைக் கவனித்தால் அவையும் இவ்விதமே சமகால இடைவெளி யுடையனவாய் இலயத்தோடு லயித் திருப்பதை உணரலாம்.

இங்ஙனம் மனிதன் இயல்பாய்ச் செய்யும் காரியங்களிலேயே அவனை அறியாமல் இலயம் பொருந்தியிருக்கக் காண்கின்றோமெனில்; பயின்று அறிந்த இசைப்பாடல்களைப் பாடும்போது பாட்டிற் கேற்ற தாளமும், அத்தாளத்திற்கேற்ற இலய ஒற்றுமையும் ஒரு இசைக்கலைஞனுக்கு எவ்வளவு பொருந்தியிருத்தல் வேண்டும்.

நம் முன்னோர்களில் பலரும், நமது வாழ் நாளிலேயே கண்டும் கேட்டும் உள்ள மகாமேதை களாகிய புதுக்கோட்டை மான்பூண்டியாபிள்ளை அவர்கள், தட்சிணாமூர்த்திப் பிள்ளை அவர்கள் எனது தந்தையாராகிய பழநி, முத்தையாப் பிள்ளை அவர்கள் இன்னும் மற்றுமுள்ள வித்வான்களும் இலயத்தில் பெரிய மேதைகளாக விளங்கியதைக் கண்டும், கேட்டும் அறிந்திருக்கின்றோம். அவர்க

ளுடைய கலைத்திறனைப் பற்றியும், இலயசம்பந்த மான பெரும் சாதனைகளைப்பற்றியும், இன்று பேசாதவரில்லை; புகழாதவரில்லை. ஆனால் செய்கை யளவில் அவர்களைவிட நாம் பின்னணியில்தான் உள்ளோம். முன்பு எல்லாம் இசையரங்குகளில் "பல்லவி" முதலிடம் பெற்றிருந்தது. ஏனெனில் பல்லவி பாடும்போதுதான் பாடகர் இலய சம்பந்த மாய்த் தமக்குள்ள முழுத்திறமையையும் வெளிப் படுத்த முடியும். இந்தநிலையில் முன்னாள் இசை வாணர்கள் இலய நுணுக்க அறிவு மிக்கு விளங்கிய தற்கு ஏற்பவே அன்றைய மக்களின் ரசிகத் தன்மையும் உச்சநிலை எய்தியிருந்தது. ஆனால் நாளடைவில் பாடகரின் போக்கும், ரசிப்போர் இயல்பும் முற்றிலும் மாறிவிட்டது. பிற்காலத்துத் தோன்றிய இசைக்கலைஞர்கள் தங்கள் அறிவை இதரத் துறைகளில் பெருக்கிக்கொண்ட அளவு இலய சம்பந்தப்பட்ட நுணுக்கங்களைத் தெரிந்து சாதிப்பதில் முயற்சி எடுத்துக்கொள்ளாது போயி னர். இன்றைய மக்களின் ரசிகத்தன்மை குறைந்த தற்கு இதுதான் முக்கியகாரணம் என்பது என் கருத்து. இலய சம்பந்தமான நுணுக்கங்களை ஆராய்ந்தறிந்து திறம்படச் செய்கையில் சாதித்துக் காட்ட இசைவாணர்கள் முன்வந்தால் மக்களின் ரசிகத்தன்மையும் உயர்வடையும் என்பதில் ஐயம் இல்லை. செயலளவில் நாம் எதையும் திறம்படச் செய்து காட்டாமலே மக்களைக் குறைகூறுதல் பொருந்தாது.

சென்னையில் ஆண்டுதோறும் இசைவாணர்கள் பலர் ஒன்றுகூடி இராகங்களைப்பற்றி விவாதங்கள் நிகழ்த்தி ஆராய்ச்சி செய்துவருவது யாவரும் அறிந்ததே; ஆனால் தாளசம்பந்தமாய் இலயசம்பந்தமாய் இதுவரை எந்த இசைவாணர்களாவது ஒன்றுகூடி விவாதித்ததுண்டா? ஆராய்ச்சி செய்ததுண்டா? இல்லை. இந்நிலை மிக வருந்தத்தக்கது; இதற்கேற்ப பண்டைய இசைத் தமிழிலக்கண நூல்கள், நம் கைக்குக் கிட்டாதொழிந்ததும், நம் தவக்குறையே. இங்ஙனம் மறைந்த நூல்கள் எத்தனையோ! அவற்றுள் இலய சம்பந்தப்பட்டவை எத்தனையோ இன்று பெயரளவில் இசைநுணுக்கம், பெருநாரை, பெருங்குருகு முதலிய நூல்கள் இருந்தன என்று அறிகிறோம். அழிந்தவைபோக எஞ்சியவை எத்தனை உளவோ தெரியவில்லை. எனினும் பண்டைய நூல்களிற் சில இன்னும் சுவடி வடிவத்திலேயே இருப்பதாக அறிகிறோம். இவைகளாவது விரைவில் அச்சடிக்கப்பெற்றுப் புத்தக வடிவில் வெளிவரவேண்டும். அச்சுச் சாதனங்களில்லாத காரணத்தால்தான் அன்று பல நூல்கள் அழிந்தன என்றால் அச்சாதனமிக்க இந்நாளிற்கூட பழைய ஏட்டுச் சுவடிகள் புத்தகவடிவு பெற வேண்டாமா!

இதை உணர்ந்துதான், சுவடி வடிவில் இருந்த "சச்சபுட வெண்பா" என்ற இத்தாள இலக்கண நூலைத் தருமை யாதீனகர்த்தர், எல்லாரும்

படித்துப் பயனடையும் வண்ணம் தக்க சமயத்தில் அச்சிட்டுப் புத்தக வடிவில் வெளியிட்டுள்ளார்கள். தற்காலத்தில் 35 வகைத் தாளங்களே அதிகமாய்ப் பழக்கத்திலிருந்து வருகின்றன என்றாலும், 108 தாளம்போன்ற இன்னும் பலவகைத் தாளங்கள் முற்காலத்தில் பழக்கத்திலிருந்து வந்திருக்கின்றன என்றறிகிறோம். அவற்றுள் 113 தாளவகையும் ஒன்றென்பது இந்நூலால் விளங்குகிறது. அக்காலத்தில் அச்சியந்திரங்களும், இதர நவீன சாதனங்களும் இல்லாத காரணத்தால் எல்லா நூல்களுமே தற்காலத்தைப்போல் வசன நடையில் அல்லாது செய்யுள் நடையிலேயே இயற்றப்பெற்று வந்துள்ளன. செய்யுள் வடிவிலுள்ளதைத் தான் மிகஎளிதிற் பாடஞ்செய்யவும் நீண்டநாள் ஞாபகத்திருத்தவும் இயலும். ஆகவே காலத்திற்கேற்ற இம்முறையை முன்னோர்கள் மேற்கொண்டதில் வியப்பதற்கொன்றுமில்லை. (சச்சபுடம் முதலாக, பெத்தாபரணம் ஈறாக 113 தாளங்களையும், அவற்றின் பெயர், அங்க அமைப்பு, மாத்திரையளவு இவைகளுடன் விளக்கி அவ்வவற்றின் இலக்கணங்களையும்] இந்நூலாசிரியர் சச்சபுடம் முதலாக, பெத்தாபரணம் ஈறாக உள்ள 113 தாளங்களைப்பற்றிய விவரங்களை 113 வெண்பாக்களில் விளக்கியுள்ளார். ஒவ்வொரு வெண்பாவிலும், ஒவ்வொரு தாளத்தின் பெயரை முதற்கண் கூறி, பிறகு அத்தாளத்திற்கு உரிய அங்க இலக்கணங்களைக் கூறி, கடைசியில் அத்தாளத்

தின்மாத்திரை யளவையும் கூறி விளக்கியுள்ளார். வெண்பாக்களினடியே அந்தந்தத் தாளத்திற்குரிய அங்க அடையாளங்களும், தரப்பெற்றுள்ளன. தனு, கோல், புலுதம், வில், அகணம், குரு, லகு, த்ருதம் முதலிய பல அங்கப் பெயர்கள் கூறப்படு கின்றன. இவற்றுள் ஒரு சில பெயர்கள் நமக்குத் தெரியாதவையாயிருந்தாலும் பெரும்பாலும் நாம் அறிந்தவைகளே. மேலும் இதிற் காணும் அங்கப் பெயர்களை அவ்வவற்றிற்கு உரிய அடையாளங்க ளுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் ஒரு அங்கத்தையே ஆசிரியர் பலபெயரிட்டு வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும் மேற்சொன்னவாறு இசைவாணர்கள் பலர் கூடி இந்நூலை ஆராய்ச்சி செய்து பார்த்தால் உண்மை விளங்காமற்போகாது. இத்துறையில் அதிக முயற்சி எடுக்கப்படவேண்டும்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சைவத்திற்கும், தமிழிற்கும், ஆற்றிவரும் தொண்டுகள் அளவிடற்பாலனவல்ல. பல சைவ சமய நூல்களும், இயற்றமிழ் நூல்களும், தருமை யாதீனத்தாரால் வெளியிடப்பெற்றுள்ளன எனி னும், இசைத்தமிழிலும் வல்ல நம்மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளப்படி இசைத்தமிழிலக்கண நூலாகிய "சச்சபுட வெண்பா" முதல் முதலாக வெளிவருவது மிகப் பொருத்தமுடையதாகும். தாம் இன்புறுவதைப்போல், மற்றவரும் இன்புற வேண்டும் என்ற கருணையால் சுவடிவடிவிலிருந்த

இத்தாள இலக்கண நூலை மகாசந்நிதானம் அவர்கள் புத்தகவடிவில் வெளியிட்டுதவியதற்கு, தமிழ்மக்கள் சிறப்பாக இசை வாணவர்கள் பெரிதும் கடமைப் பட்டவராவார்கள். மகாசந்நிதானத்தின் திருவுளப் படி இந்நூலை ஒவ்வொரு இசைக் கலைஞரும் பயின்று பயன் பெறுவர் எனத் திண்ணமாய் நம்பு கிறேன்.

இங்ஙனம்,
திருவாங்கூர் சமஸ்தான வித்துவான்,
பழநி, M. சுப்ரமணியம்.

# செய்யுள் முதற்குறிப்பகராதி.

[பக்க எண்.]


| | |
|---|---|
| அணியும் | 54. |
| அபங்க | 39. |
| அரங்க | 8. |
| அரங்கத்தி | 13. |
| அரங்கப்ர | 16. |
| அருளன்னி | 35. |
| அன்னநா | 17. |
| அன்னலீலை | 11. |
| ஆதிதா | 4. |
| ஆளவரும் | 1. |
| இச்சையார் | 52. |
| இப்பிரதி | 44. |
| இரதி | 46. |
| இராவர்த் | 55. |
| உற்கட் | 4. |
| ஏகதாளம் | 36. |
| கண்டகங் | 37. |
| கந்தர்ப்பம் | 6. |
| கந்துகமே | 35. |
| கருணையதி | 47. |
| காருதிதான் | 51. |
| கீர்த்தி | 23. |
| குடுக்கம் | 26. |
| கெசலீலை | 10. |
| சங்கை | 31. |
| சச்சபுடம் | 2. |
| சச்சரி | 5. |
| சட்டாளம் | 47. |
| சட்விதா | 3. |
| சதுத்தானம் | 38. |
| சதுமுகன் | 42. |
| சதுரச் | 15. |
| சமதாளம் | 30. |
| சம்பை | 44. |
| சம்பொற் | 3. |
| சரப | 18. |
| சனக | 54. |
| சாசபுடம் | 2. |
| சாருமி | 32. |
| சாற்றும் | 28. |
| சிங்கநந்த | 20. |
| சிங்கநா | 17. |
| சிங்கலீலை | 6. |
| சிங்கவிக் | 14. |
| சீநந்த | 51. |
| சீரங்க | 7. |
| செகற்சம்பை | 42. |
| செப்புமந்தி | 32. |
| செயதாளம் | 26. |
| செயமங் | 24. |
| செயஸ்ரீ | 20. |
| சேரித | 8. |
| சேரும் | 41. |
| சொல்துருத | 41. |
| சொல்லும் | 27. |
| சொல்விசையா | 21. |

| | | | |
|---|---|---|---|
| தற்பணமே | 5. | மிச்சிரமே | 16. |
| திரிபின்னம் | 10. | முகுந்தம் | 34. |
| திரிமாத் | 43. | மெய்ச்சம | 38. |
| திரியச் | 15. | மொழிச்சிங்க | 7. |
| திருகீர்த்தி | 29. | ராசகங் | 40. |
| திருதீய | 45. | ராசகூடா | 12. |
| துதியக | 22. | ராசதாளம் | 13. |
| துய்யவராங் | 19. | ராசநா | 49. |
| துரங்க | 19. | ராசவித்யா | 24. |
| தூய்வீர | 11. | லகுசே | 40. |
| நந்தனமே | 30. | லளிதப்பிரி | 53. |
| நற்கோ | 28. | வசந்தம் | 45. |
| நிச்சாருக | 27. | வத்தனை | 48. |
| பாருணை | 56. | வருணபதி | 48. |
| பரிக்கிரமம் | 9. | வருலளிதம் | 46. |
| பார்ப்பதி | 50. | வனமாலி | 14. |
| பிரகாச | 25. | வன்னபின் | 12. |
| பிரதி | 21. | வன்னமட்டி | 33. |
| பிரத்யாங்கம் | 9. | விசையதா | 23. |
| பூரண | 36 | விடமகங் | 37. |
| பெத்தா | 55. | விந்துமா | 29. |
| பெறுடோம் | 39. | விலோகிதம் | 53. |
| மகாநந் | 22. | விளலீலை | 52. |
| மட்டியமீர் | 25. | விற்பூரமே | 50. |
| மதங்கம் | 49. | வின்னசது | 43. |
| மதிகுரு | 31. | வைத்தபெரு | 34. |
| மல்லிகா | 18. | | |

# குறியீட்டு விளக்கம்

| குறிகள். | மறுபெயர்கள். | மாத்திரை. |
| --- | --- | --- |
| ᒪ | தனு, வில், குரு, சிலே. | 2 |
| \| | கோல், சரம், அம்பு, லகு, கால், செவ்வை, வாளி, கணை. | 1 |
| ᑫ | புலுதம், மின், மணி, புயங்கம், பணி, உயிர். | 3 |
| o | துருதம், சுழி, விழி, கொம்பு, வட்டம், மதி, கண். | $\frac{1}{2}$ |
| ᒥ | விந்து, விராமம். | $\frac{1}{4}$ |

மகணம் : ᒪ ᒪ ᒪ

சகணம் : | | ᒪ

நகணம் : | | |

பகணம் : ᒪ̇ | |

தகணம் : ᒪ | ᒪ


BALU
BROS

உ

குருபாதம்

# சச்சபுடவெண்பா

## காப்பு

ஆளவரும் தூய திரியக்கண் நால்வாய்த்
தாள சமுத்திரநூல் தண்டமிழ்க்கு—நாளும்
தடதவளத் தந்தத் தருண கிரணக்
கடவிகடக் கைக்களிறே காப்பு.

---

இது விநாயக வணக்கம் கூறுகிறது. ஆளவரும் களிறு, நால்வாய்க் களிறு எனக் கூட்டுக. திரியக்கண் - மூன்றுகண். நால்வாய் - தொங்குகின்ற வாய். தட தவள தந்தத்து - பெரிய வெண்மையான தந்தத்தினையுடைய. அருண கிரண - சிவந்த ஒளியையுடைய. கடம் - மதம். விகடக் கைக் களிறு - விகடவிநாயகர். விகடம் கூத்து வகையுள் ஒன்று. விகடக் கூத்தியற்றும் விநாயகப்பெருமான், கூத்துக்கு இன்றியமையாத தாளநூலுக்குக் காப்பாதல் அறிவித்தபடி.

இச்செய்யுள் தாளசமுத்திரம் என்னும் நூலுக்குக் காப்பாய் அமைந்திருக்கிறது இதுபற்றிய ஆராய்ச்சியை முன்னுரையிற்காண்க.

## சச்சபுடம்

சச்சபுடம் ரண்டு தனுக்கோல் புலுதமுடன்
இச்சைபெறு மாத்திரையும் எட்டாகும்—அச்சமற
ஈசனது மேற்குமுகத் தேளமுந்து வேதர்குலத்(து)
ஆசையிலொன் ருந்தாள மாம். 1

ட ட । ꠰ மாத்திரை அ

## சாசபுடம்

சாச புடமேக தனுக்கோல் இரண்டொருவில்
ஆசைபெறு மாத்திரையும் ஆருகும்—ஈசனது
வாமமுகத் தேளமுந்து மன்னர்குலந் தானுகும்
ஏமகிழ்ரண் டாந்தாள மே. 2

ட । । ட மாத்திரை சு

---

1. ताळे चच्चपुटेऽज्ञेयं गुरुद्वंद्वं लघु प्लुतम् । -ஆதிபாதம்.

இது முதல் ஐந்து செய்யுட்கள் சத்யோஜாதம் முதலான இறைவனது ஐந்து திருமுகங்களிலிருந்தும் உண்டான ஐந்து தாளங்களின் அளவும், பிறப்பிடமும், சாதியும், எண்ணும் உணர்த்துகின்றன. மேற்குமுகம் என்றது சத்யோஜாத முகத்தை. வேதர் குலம் - பிராமணகுலம்.

2. गुरुर्लघू गुरुश्चैव भवेच्चाचपुटेऽभिधा । -ஆதிபாதம்.

வாம முகம் - வாமதேவ முகம். ஏமம் மகிழ் என்பது ஏமகிழ் எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது. ஏமம் - பாதுகாப்பு.

## சட்விதா

சட்விதா வேமின் சரமிருவில் அம்புபணி
இப்புவியின் மாத்திரை இங் கீராறே—பொற்புறவே
நம்பர் மூகமகோர நண்ணிவரும் செட்டிகுலம்
அம்புவிமூன் றுந்தாள மாம். 3

ऽ | ட ட | ऽ மாத்திரை கஉ

## சம்பொற்கெட்டம்

சம்பொற்கெட் டம்புலுதம் தான்மகண மேபுயங்கம்
மூன்பிற்சொன் மாத்திரைநான் மூன்றுகும்—
இன்பமுகம்
நாதனது தற்புருஷம் நற்சூத் திரசாதி
மீதுறுநா லாந்தாள மாம். 4

ऽ ட ட ட ऽ மாத்திரை கஉ

---

3. पलँगा गलपाश्चैव षड्विवतापुत्रकस्य यत् । -ஆதிபாதம்.

பொற்பு - அழகு. நம்பர் - சிவபெருமான். இது சற்பிதா புத்திரகம் எனவழங்கப்பெறும் என்றும், ऽ | ட | ட ऽ இம் முறையில் அக்ஷரங்கள் அமையும் என்றும் கூறும்தாளக்கலிவெண்பா.

4. मगणस्य प्लुताद्यंतं सम्पद्वेष्टाच संज्ञिके । -ஆதிபாதம்.

मगणः स्यात् प्लुताद्यन्तः संपद्वेष्टाकसंज्ञके । -அர்ணவம்.

இதற்குச் சம்பத்வேஷ்டம் என்றும் பெயருண்டு.

## உற்கட்டிதம்

உற்கட் டிதமகணம் ஓங்கிவரு மாத்திரையே
கொட்புற்ற மூவிரண்டு கொள்ளுமே—நட்புற்ற
சங்கரன்ஈ சானமுகம் சாதியே சங்கிரமம்
இங்கிவையஞ் சாந்தாள மென். 5

ட ட ட மாத்திரை சு

இந்த அஞ்சுதாளமும் ஈசுவரனுடைய பஞ்சமுகத்திற் பிறந்தன. இனி அகஸ்தியர் பிரஸ்தாரம்.

## ஆதிதாளம்

ஆதிதா ளந்தான் அகத்தியன்சொல் தாளமே
ஏதமற ஓரிலகு எய்தவும்—மூதூர்சேர்
மாத்திரைஒன் றாக வகையுரைத்தான் மாமுனிவன்
ஏத்திய ஆ றாந்தாள மே. 6

। மாத்திரை க

---

5. उद्घुन्दे मगणश्चैव भरतस्य यथाक्रमम । -ஆதிபாதம்.

उद्घटे मगणस्त्वेकः । -அர்ணவம்.

கொட்பு-சுழற்சி. இதனை உத்புந்தம் எனவழங்கும் ஆதிபாதம்.

6. आदिताळे लघुः स्मृतः । -ஆதிபாதம்.

त्वादिताले लघुःस्मृतः । -அர்ணவம்.

ஏதம் - குற்றம். இந்நூலில் முனிவன் என்றுவருவன யாண்டும் அகத்தியனை உணர்த்தி நிற்கும்.

## தற்பணம்

தற்பணமே ரண்டு தருந்துருதம் ஓர்குருவாம்
சொற்பயிலு மாத்திரைகள் சொல்மூன்றே—
நிற்பதென
முத்தமிழ்சேர் கும்ப முனியுரைத்தான் பூதலத்தில்
இத்தகைய தூங்தாள மே. 7

○ ○ ட மாத்திரை ங

## சச்சரி

சச்சரியில் ரண்டுசுழித் தன்பின்னே விந்துசரம்
மெச்சவரும் இப்படிஎட் டேவிதித்தான்—
இச்சகத்தின்
மூவாறுமாத்திரைஎன்றேமொழிந்தான்மாமுனிவன்
பாவாயெட் டாந்தாளம் பார். 8

○ல| ○ல| ○ல| ○ல| ○ல| ○ல| ○ல| ○ல| மாத்திரை கஅ

---

7. दर्पणस्य द्रुतद्वंद्वं गुरुश्चैकः प्रकीर्तितः । -ஆதிபரதம்.

दर्पणे स्यात् द्रुतद्वन्द्वं गुरुस्त्वेकः प्रकीर्तितः । -அர்ணவம்.

இரண்டு என்பதை இக் கவிஞர் யாண்டும் ரண்டு என்றே பிரயோகிக்கிறார். இத்தகை - இவ்வாறு.

8. अष्टकत्वं चचचरिभ्यां विरामान्तौ द्रुतौ लघुः । -ஆதிபரதம்.

अष्टकत्वं च चच्चर्यां विरामांतौर्द्रुतौ लघुः । -அர்ணவம்.

சகம் - உலகம். பாவாய் என்பது மகடூஉமுன்னிலை.

## சிங்கலீலை

சிங்கலீ லைக்குத் திகழும் சரம்ஒன்று
துங்கவிழி மூன்றொருகோல் தோன்றுமே—
அங்கதனில்
ஆராயில் ஓர்மூன் றரைமாத் திரையாகும்
ஓராய்தா ளம்ஒன்ப தே. 9

| ० ० ० | மாத்திரை ௩இ

## கந்தர்ப்பம்

கந்தர்ப்பம் கொம்பிரண்டு காலொன்று
வில் இணையாம்
வந்துற்ற ஆறு மாத்திரைதான்—சந்தக்
களபமுலை மானே! கலைமுனிவன் சொன்ன
தளபவலை பத்தாந்தா ளம். 10

० ० | ⊤ ⊤ மாத்திரை ௬

---

9. सिंहलीलाविधातव्यं लघ्वाद्यंतं द्रुतत्रयम । -ஆதிபாதம்.
सिह्मललिते विधातव्यं लघ्वाद्यंतं द्रुतत्रयम ।-அர்ணவம்.

ஓராய் - ஆராய்ந்து பார்.

10. द्रुतद्वंद्वं यकारश्च कंदर्पः परिकीर्तितः । -ஆதிபாதம்.
द्रुतद्वन्द्वं यकारश्च कंदर्पं परिकीर्तितः । -அர்ணவம்.

சந்தம் - அழகு. களபம் - கலவைச் சாந்து. சொன்னது அளபு அ அவை எனப் பிரித்து, சொன்னதாகிய அளபினையுடைய அவை என்று பொருள் காண்க.

## சிங்கவிக்கிரமம்

மொழிச்சிங்க விக்கிரமம் மூச்சிலைகோல் மின்கோல்
பழுதறவே வில்லுப் பணியா—முழுதும்
தெரியில் அதுமாத் திரைஈரெட் டாக
வருபதினொன் றாந்தாள மாம். 11

ㄣ ㄣ ㄣ । ௨ । ㄣ ௨ மாத்திரை ௧௫

## சீரங்கதாளம்

சீரங்க தாளம் திகழ்சகணம் கோல்உயிராம்
ஓரங்க மாத்திரையே எட்டாகும்—தேரும்
தமிழ்முனிவன் சொற்பரதம் தன்னி லுரைத்தான்
இமிழ்பனிரண் டாந்தாள மே. 12

। । ㄣ । ௨ மாத்திரை ௮

---

11. सिंहविभ्रमतालेस्यु मगणो लंपलांगपः । -ஆதிபாதம்.

सिंहविक्रमताले स्युः मगणो लंपलांगपौ । -அர்ணவம்.

மூச்சிலைகோல் புலுதத்தோடு வில் கோல் புலுதம் வைத்து வழங்கும் தாளக்கலிவெண்பா.

12. श्रीरंगे संज्ञके ताळे सगणो लंप्लुतौ मतौ । -அர்ணவம்.

இமிழ் - ஒலிக்கின்ற.

## இரதலீலை

சேரிரத லீலைதனில் செவ்வைசேர் வில்இரண்டு
பாரரச மாத்திரைஆ றேபகர்வார்—வாரார்
மூலையிலே! வேத முனிமுன் உரைத்தான்
நிலைபதின் மூன் ருந்தாள நேர். 13

| | ㄣ ㄣ மாத்திரை சு

## அரங்கதாளம்

அரங்கதா ளந்தான் அணிதுருதம் நாலு
பரம்பெறு வில்இப் படியே—வரும்புவியில்
நாலாகும் தன்மாத் திரைஎன்ருன் நாடுபதி
ஞலாந்தா ளந்தான் அவை. 14

O O O O ㄣ மாத்திரை ச

---

13. रतिलीले विधातव्यं लघु(रेको) गुरुद्वयम्। -அர்ணவம்.

பார ரச மாத்திரை - பெரிய சுவையோடு கூடிய மாத்திரை. ஒரு லகுவும் இரண்டு குருவும் ஆக மாத்திரை ஐந்து என்கிறது அர்ணவம்.

14. चत्वारो रङ्गताले स्युः गुर्वन्तं दचतुष्टयम्। -அர்ணவம்.

பரம்பெறு - மேன்மைபெற்ற.

## பரிக்கிரமம்

பரிக்கிரமம் கொம்பிரண்டு பைங்கோல் இரண்டு
வரிச்சிலையொன் றாக வருமே—........
முதலஞ்சே மாத்திரை என்றான் முனிவன்
பதினைஞ்சாம் தாளமே பார், 15

o o | | ட மாத்திரை ௫

## பிரத்யாங்கம்

பிரத்யாங் கம்மகணம் பின்கோல் இரண்டு
திறத்துவரு மாத்திரை எட்டே—கறுத்தவிழி
மானே! பொதிய மலைமுனிவன் சொற்படியே
நானான்குத் தாள நவில். 16

ட ட ட | | மாத்திரை ௮

---

15. परिक्रमे द्रुतद्वन्द्वं सगणस्तदनन्तरम् । -அர்ணவம்.

16. प्रत्यंगसंज्ञके ताले मगणस्याल्लघुद्वयम् । ,,

நானான்குத் தாளம் - பதினாறாம் தாளம்.

ட ட | ட | இம்முறை தாளக்கலிவெண்பாவிற் கண்டது.

## கெசலீலை

கெசலீலை நால்வாளி கேளும் விராம
வசமான நாலேகால் மாத்திரையாம்—நிசமாப்
பதினேழாந் தாளம் பரதமுனி சொன்னார்
சதமாகக் கொண்டுரைப்பீர் தான். 17

।।।ે மாத்திரை சவ

## திரிபின்னம்

திரிபின்னம் கோல்வில் திகழும் புலுதம்
இருமூன்று மாத்திரை ஏயும்—வருபுவியில்
நண்ணு முனிவன் நயந்துரைத்த தாளந்தான்
எண்ணும் பதினெட்டே என். 18

। ⊢ ૪ மாத்திரை கூ

---

17. लचतुष्कं विरामान्तं गजलीले प्रकीर्तितम् । -அர்ணவம்.

நிசம் - உண்மை. சதம் - உறுதி.

18. लघुर्गुरुः प्लुतश्चैव त्रिभिन्ने परिकीर्तितम् । -அர்ணவம்.

## வீரவிக்கிரமம்

தூய்வீர விக்கிரமம் சொல்இரண்டு நேர்சுழிவில்
ஏயுமாத் திரைஐந்தே ஏற்கும்—வேய்மேவு
தோளணையாய்! கும்பமுனி தோற்றுவித்தான் இப்புவியில்
தாளமது பத்தொன்ப தாம். 19

||00५ மாத்திரை ரு

## அன்னலீலை

அன்னலீலைக்குவரு மம்பிணைபின் விந்தலைதான்
இந்நிலத்தின் மாத்திரைஇ ரண்டரையாம்— வன்னமொழி
மஞ்சேர் குழல்மயிலே! வண்மை பெறுவேநால்
அஞ்சாந்தா ளந்தான் அவை. 20

ǀ̀ǀ̀ மாத்திரை உஇ

---

19. वीरविक्रमताळे तु लौ द्रुतौ च गुरुः स्मृतः । - அர்ணவம்,

தூய்-தூய்மையான. ஏயும்-பொருந்தும். வேய்-மூங்கில்.

20. सविरामं लघु द्वंद्वं ताळःस्यात् हंसलीलके । - அர்ணவம்.

மஞ்சு - மேகம். வன்மொழி - அழகியமொழி.

## வன்னபின்னம்

வன்னபின்னத்து வருந்துருதம் இரண்டொருகோல்
பின் ஒருவில் தோன்றிப் பிறங்குமே—இங்கிலத்தில்
குன்று முனிகாலு மாத்திரைகொண் டானிருபத்
தொன்றுந்தா ளந்தான் உரை. 21

o o | ⏊ மாத்திரை ச

## ராசசூடாமணி

ராசசூ டாமணிதான் ரண்டுசுழி யேநகணம்
மாசறுமீர் வட்டங்கோல் மன்னுகுரு—ஓசைபெற
இத்திசையின் மாத்திரை எட்டாகும் பாவைஇரு
பத்திரண்டாங் தாளம் பகர். 22

o o | | | o o | ⏊ மாத்திரை அ

---

21. वर्णभिन्नाभिधे ताळे द्रुतद्वन्द्वं लघुर्गुरुः । - அர்ணவம்.

22. राजचूडामणौ ताळे द्रुतौ नश्च द्रुतौ लगौ । ,,

## அரங்கத்தியோதனம்

அரங்கத்தி யோதனந்தான் ஆகு மகணம்
இரங்கிய கோல்புலுதம் ஏற்கும்—வருஞ்செசால்
தருவதுமாத் திரையத்துத் தாளமது பார்க்கில்
இருபத்து மூன்ருகு மே. 23

ட ட ட | ௨ மாத்திரை ய

## ராசதாளம்

ராசதா ளம்குருமின் ரண்டுசுழி வில்ஒருகோல்
வாசப் புயங்கம் வாய்க்குமே—மாசிலாப்
பன்னிரண்டு மாத்திரையாம் பாவைநல்ல
தாளந்தான்
இந்நிலத்தில் நாலாற தே. 24

ட ௨ o o ட | ௨ மாத்திரை கஉ

---

23. रंगद्योतनताळेतु मगणो लप्लुतावपि । —அர்ணவம்.

24. गपौ द्रुतौ गलपौ च राजताळे प्रकीर्तितः । ,,

வாசப் புயங்கம் = மணத்தை விரும்புகின்ற பாம்பு; என்றது இங்கே புலுதத்தை.

## சிங்கவிக்ரீடிதம்

சிங்கவிக் ரீடிதத்தில் சேரிலகு ரண்டோர்மின்
தங்குருகோல் வில்புலுதம் சாருமே—அங்கோல்மின்
ஆகப் பதினேழ் ஆயமாத் திரைதாளம்
வாகுற் றையைந்து வரும். 25

| | ௨ ட | ட ௨ | ௨ மாத்திரை கஎ

## வனமாலி

வனமாலி நாலுமதி இருகோல் இருகண்
இனமாம்வில் ஒன்றேழ்மாத் திரையே—தனதாக
இத்தா ரணியில் இசைத்தான் முனிவன் இரு
பத்தாறுந் தாளம் பகர். 26

0 0 0 0 | | 0 0 ட மாத்திரை எ

---

25. ल्लौपो गल्लौ गपल्लैः प्लुतश्चेत् सिंहविक्रीडितम् । -அர்ணவம்.

வாகுற்று - வாகாய் உற்று. வாகு - முறை.

**சிங்கவிக்கி ரீடிதந்தான் சேரிரண்டு கோல்புலுதம்**
**அங்குருகோல் வில்புலுதம் ஆங்குருபாம்—இங்கிவற்றில்**
**மாத்திரைகள் சொல்லின் மருவு பதினெட்டே**
**ஏத்து மிதற்கே யியல்பாகும்-**

என்பது தாளக்கலிவெண்பா. இதில் 18 மாத்திரைகொண்டு, இறுதியிலுள்ள புலுதத்திற்குமுன் லகு நீக்கிக் குருகொண்டுள்ளது இந்நூல்.

26. चतुर्द्रुता लौ दयुगं गुरुः प्रांते निवेशितः । -அர்ணவம்.
वनमाली भवेत्तालो गदितः शास्त्रवेदिभिः ,,

தாரணி - பூமி.

## சதுரச்சிரவன்னம்

சதுரச் சிரவன்னம் தான்பகணம் கொம்பீர்
எதிரொத்த வில்ஏழு மாத்திரையே—முதிருற்ற
தென்னப் புகன்முன் இருநிலத்தின் மாமுனிமு
வொன்பதாம் தாளம் உரை. 27

ᐩ | | O O ᐩ மாத்திரை எ

## திரியச்சிரவணம்

திரியச் சிரவணம் சேர்கணே கொம்பீர்
இரியச் சகணமறு மாத்திரை—விரிமலரின்
மட்டாருங் கூந்தல் மடமயின்மின் னே!இருபத்
தெட்டாம்தா ளந்தான் இவை. 28

| O O | | ᐩ மாத்திரை கூ

---

27. गुरुर्लघू द्रुतौ गश्च वर्णे स्याच्चतुरश्रके । -அர்ணவம்.

இதில் இறுதியில் வில்நீக்கிப் புலுதங்கொண்டு 8 மாத்திரை யாகக்கூறும் தாளக்கலிவெண்பா.

28. लघुद्रुतौ लघू गश्च त्रिश्रवर्णः प्रकीर्तितः । -அர்ணவம்.

கொம்பு ஈர் - இரண்டு கொம்பு. இரிய - இறங்க; என்பது கூட என்பதாம். விரிமலரின் மட்டு - மலர்ந்த மலரின் உண்டான தேன். ஒரு சுழியை நீக்கி ஐந்தரை மாத்திரை காண்கிறது தாளக்கலிவெண்பா.

## மிச்சிரம்

மிச்சிரமே நாற்சுழியின் விந்தவையே மும்முறையாம்
அச்சிரவில் ஈர்சுழிவில் லாமகணம்—மெச்சவரு
பத்தொன்ப தேமுக்கால் மாத்திரையாம் தாளம்இரு
பத்தொன்ப தென்றே பகர். 29

௦௦௦ல ௦௦௦ல ௦௦௦ல ௨+ ௦௦ ++ | + மாத்திரை கக௯ே

## அரங்கப்ரதீபகம்

அரங்கப்ர தீபகமே ıாகும் தகணம்
மருங்கில் சிலைபுலுதம் வாய்க்கும்—நெருங்கிப்பின்
நேருமதில் மாத்திரைபத் தாகும்தா ளந்தான்
தேருவது மூவொருப தே. 30

+ + | + ௨ மாத்திரை ௰

---

29. प्रतितुर्यं विरामान्तं मिश्राख्ये द्वादशद्रुताः । -அர்ணவம்.

प्लुतोगुरुः द्रुतद्वंद्वं तगणश्च गुरुस्ततः । ,,

प्लुतोगुरुः द्रुतद्वंद्वं तगणोगः प्लुतावपि । -ஆதிபாதம்.

அச்சிரம் - முன்பனி; என்றது இங்கே "காரே கூதிர் முன்பனி" என்ற பருவகாலத்தின் தமிழ் வழக்காற்று முறையில் மூன்றுவதாக இருப்பதால் மூன்று என்னும் எண்ணைக் குறிக்க மட்டும் வந்தது.

30. रंगप्रदीपताळे स्यात्तगणो गःप्लुतो यदि । -அர்ணவம்.

நேரும் அதில் - கூடிய அதில். + | | + | ௨ இவ்வாறு அட்சரம் வகுக்கும் தாளக்கலிவெண்பா.

## அன்னநாதம்

அன்னநா தங்கோல் அணிபுலுதம் ரண்டுசுழி
இன்உயிர்மின் மாத்திரையே எட்டாகும்—
பன்னுதமிழ்
ஓது முனிவன் உரைத்தானே தாளந்தான்
மீதுமுப்பத் தொன்றாகு மே. 31

| ॰ ० ० ॰ மாத்திரை அ

## சிங்கநாதம்

சிங்கநா தம்யகணம் சேரும் லகுகுருவே
அங்கதனின் மாத்திரைஎட் டாகுமே—வங்கக்
கடலேழும் உண்ட கலைமுனிசொல் தாளம்
அடைவேநா லெட்டாம் அது. 32

| ᅮ ᅮ | ᅮ மாத்திரை அ

---

31. लघुतौ द्वौ द्रुतौ प्लुतः.......... हंसनादे । -அர்ணவம்.

32. यगणो लोगुरुश्चैव सिंहनादो निरूपितः । ,,

வங்கம் - தோணி, அடைவே - முறையாக.

'சிங்கநாதங் கோல்வில் கோல்வில்லாய்ச் - சேர்ந்தழகார்
இங்கிதற்கு மாத்திரைகள் எட்டேகாண்' என்பது கலிவெண்பா. இதன் குறிப்பு | ᅮ ᅮ | ० என்று காணப்படுகிறது. வெண்பாவில் உள்ளபடி | ᅮ | ᅮ என ஆறுமாத்திரைக்கே பரியாயம்இருத்தல் காண்க. ஆதலால் பாடங்கொண்டது பிழைபோலும்.

## மல்லிகாமோதம்

மல்லிகா மோதத்தில் வாழ்கணேரண் டேதுருதம்
சொல்லியநா லாகத் துலங்குமே—வல்லபந்தன்
ஒப்புற்ற மாத்திரைநால் ஓங்கிவரும் தாளந்தான்
மூப்பத்தின் மூன்றே மொழி. 33

| | ௦ ௦ ௦ ௦ மாத்திரை ச

## சரபலீலை

சரபலீ லைக்கிருகோல் தான்சுழியே நாலாம்
பொருகணை அம் பாகப் பொருந்தும்—வருபுவியில்
மாலாக வேஆறு மாத்திரையாம் முப்பத்து
நாலாகும் தாளம் நவில். 34

| | ௦ ௦ ௦ ௦ | | மாத்திரை சு

---

33. ताळे तु मल्लिकामोदे लद्वयं खचतुष्टयम् । -அர்ணவம்.

34. शरभलीलं लघू द्रुतचतुष्कं लौ......... ,,

மாலாக - மயங்க.

## அரங்காபரணம்

துய்யவரங் காபரணந்தோன் றிருவில்கோலிணைமின்
செய்யதொரு மாத்திரைசேர் ஒன்பதாம்—
வையகத்தில்
வேழஞ்செறிந்திடுசொல்மின்னே!சொல்தாளந்தான்
ஏழஞ் செனமொழியு தே. 35

⌐ ⌐ | | ◦ யாத்திரை கூ

## துரங்கலீலை

துரங்கலீ லைக்குத் துணைவிழிகோ லாக
நெருங்கிரண்டு மாத்திரையே நிற்கும்—தரங்கக்
கடலேழும் உண்ட கலைமுனிசொல் தாளம்
அடைவே நாலொன்பதா மே. 36

o o | மாத்திரை உ

---

35. तगणो लप्लुतौ कायौं रंगाभरणसंज्ञके । -அர்ணவம்.

வேழம் - கரும்பு. எழஞ்சு - முப்பத்தஞ்சு. | | ⌐ ⌐ ◦ என்ற முறை தாளக்கலிவெண்பாவினமைப்பு.

36. तुरंगलीला ताळे स्यात् द्रुतद्वंद्वं लघुस्ततः । -அர்ணவம்.

தரங்கம் - கடல்

## சிங்கநந்தனம்

சிங்கநந்தனம் வில்லிரண்டு செவ்வைமின்கோல்
விற்சுழியீர்
தங்கிருவில் கோல்மின் சரமுயிர்வில்-பொங்கிருநேர்
புள்ளடியே மாத்திரைகள் பொன்முப்பா னீர்தாளம்
தெள்ளியமுப் பத்தேழ தே. 37

ட ட | ஓ | ட O O ட ட | ஓ | உ ட | | + மாத்திரை ௩௨

## செயஸ்ரீவரம்

செயஸ்ரீ வரதாளம் திகழ்ரகணங் கோலே
உயர்குருவே கூடி உதவு—நயக்கவரும்
எட்டாகு மாத்திரையே என்றான் முனிமுப்பத்
தெட்டாகும் தாளந்தான் இதே. 38

ட | ட | ட மாத்திரை அ

---

37. तपौ लो गो द्रुतौ गौ लपलपागं च लंद्वयम् । -அர்ணவம்

செவ்வை - நேர்; என்றது ஒரு மாத்திரை பெறும் லகுவை. புள்ளடி - ஒலியற்ற நாலு மாத்திரை.

38. रगणो लो गुरुश्चैव जयश्रीरिति गण्यते । -அர்ணவம்.

நயக்க - விரும்ப.

## விசையாநந்தனம்

சொல்விசையா னந்தனமே துன்னும் சரம்இரண்டு
வில்ஒருமூன் றாக மிகுமே—சொல்லுவது
ஆய இருநான்கே யாமாத் திரைதாளம்
தூயமுப்பத் தொன்பதெனச் சொல். 39

| | ✓ ✓ ✓ மாத்திரை அ

## பிரதிதாளம்

பிரதிதா ளத்தில் பெறுங்கணிரண் டீர்கொம்(பு)
உறுமவையின் மாத்திரைகள் ஓர்மூன்(று)—அறிய
வரையார் முனிவன் வகுத்தனனே பாரில்
உரைதாளம் சொல்நாற்ப து. 40

| | ○ ○ மாத்திரை ந

---

39. भवेयुर्विजयानंदे लद्वयं गुरवस्त्रयः। -அர்ணவம்.

40. लौ द्रुतौ प्रतिताळे स्यात्। ,,

வரை - பொதியமலை.

## துதியகம்

துதியகநேர் ஒன்று துருதமிரண் டாகும்
சிதைவிரண் டேமாத் திரையே—மதிநுதலாய்!
மாமுனிவன் சொன்ன வகையே வருந்தாள
மேமுனிநாற் பத்தொன்ற தே. 41

| ○ ○ மாத்திரை உ

## மகரநந்தம்

மகரநந் தம்மிரண்டு கண்நேரோ டொன்று
பகரும் சகணம் படியும்—செகதலத்தில்
கூறு மாத்திரையே கொள்ளும் தமிழ்முனிசொல்
ஆறேழு தாளமது வாம். 42

○ ○ | | | ⌐ மாத்திரை கூ

---

41. द्रुतौ लश्च द्वितीयके। -அர்ணவம்.

42. मकरंदे द्रुतद्वंद्वं लत्रयं च गुरुस्ततः। ,,

தாளமே முனி என்று கூட்டுக. முன்னி என்பது முனி எனத் தொகுக்கப்பெற்று எண்ணி என்னும் பொருள் தந்தது.

## கீர்த்திதாளம்

கீர்த்திதா ளம்லகுவில் கெழுமின் சிலைகோல்மின்
மாத்திரையு முந்நான்கு வாய்க்குமே—
பார்த்திடிலோ
தோன்றல் மலைமுனிவன் சொல்தாள நாற்பத்து
மூன்றதுவே யாக மொழி. 43

| ┬ ⫱ ┬ ¦ ⫱ மாத்திரை கஉ

## விசையதாளம்

விசையதா ளம்புலுதம் வில்உயிர்கோ தண்டம்
இசையிலது மாத்திரைபத் தேயாம்—திசைசேரும்
வேலாரும் கோல விழிமயிலே! நாற்பத்து
நாலாகும் தாளம் நவில். 44

⫱ ┬ ⫱ ┬ மாத்திரை ௰

---

43. लगौ पगौ लपौ चैव कीर्तिताळे प्रकीर्तिताः। -அர்ணவம்

கெழு - பொருந்திய. தோன்றல் - பெருமையிற் சிறந்தவன்.

44. प्लुतो गश्च प्लुतो गश्च ताळे विजयसंज्ञके। -அர்ணவம்.

திசைசேரும் வேலாரும் கோல விழி - நாற்றிசையும் சென்று பாவுகின்ற வேலை ஒத்த அழகிய விழி.

## செயமங்கலம்

செயமங் கலமிருகோல் சேர்குருவே நன்றேபின்
உயருஞ் சகணம் உறுமே—கயல்விழியாய்!
மெய்என்பார் மாத்திரைகள் மேவுமெட்டுத்
தாளந்தான்
ஐயொன்ப தாமே அவை. 45

| | ㄣ | | ㄣ மாத்திரை அ

## ராசவித்யாதாளம்

ராசவித்யா தாளநே ராங்குருஒன் றீர்வட்டம்
ஓசைபெறு மாத்திரைகள் ஓர்நான்கே--நேசமிக
மன்னு முனிவன் மகிழ்ந்துரைத்த தாளந்தான்
உன்னுநாற் பத்தா றுரை. 46

| ㄣ ○ ○ மாத்திரை ச

---

45. सकारश्च सकारश्च जयमंगलसंज्ञके । -அர்ணவம்.

ஐயொன்பது - நாற்பத்தைந்து.

46. लघुर्वेको द्रुतौ ताळे राजविद्याधराभिधे । ,,

## மட்டியம்

மட்டியமீர் லகுவண் குருஒன் றெய்தினபின்
தொட்ட சுழிநாலு தோன்றுமே—இட்டமுடன்
மூவிரண்டு மாத்திரையே மொய்குழலாய்! தாளந்தான்
தாவுறுநாற் பத்தேழே தான். 47

| | ட ○ ○ ○ ○ மாத்திரை ௬

## பிரகாசமட்டம்

பிரகாச மட்டமுக் கோல்பின் பகணமா
நிரைஏழு மாத்திரையே நிற்கும்—குறையா
பண்ணார் மொழிமயிலே! பார்மீதி லேமுனிசொல்
எண்ணாறு தாளமா மே. 48

| | | ட | | மாத்திரை ௭

---

47. सकारो मठ्यताळः स्यात् ततोऽग्रे खचतुष्टयम् ।
-ஆர்ணவம்.

48. तकारतो गुरुद्वंद्वं नशब्दं चान्यमट्टके ।

குறையா பண்ணார் மொழி - குறைபாடு இல்லாத இசை நிறைந்த மொழி.

## செயதாளம்

செயதாளம் கோல்வில் திகழிருநேர் கொம்பீர்
உயிரேஒன் றாக உதவும்—இயல்பெறவே
ஒன்பதுமாத் திரையாய் ஒருதாள நாற்பத்(து)
ஒன்பதாம் என்றே உரை. 49

| ऽ | | ○ ○ ꝸ மாத்திரை ௯

## குடுக்கம்

குடுக்கம் இரண்டுசுழி கோலிரண்ட தாக
விடுக்க அதில் மாத்திரைமூன் றாமே—நடக்க
வருவதாம் என்ன மதித்தார் முனிஐ-
யொருபதாம் தாளம் உரை. 50

○ ○ | | மாத்திரை ௩

---

49. जगणो लो द्रुतौ पञ्च जयताळे प्रकीर्तितः । -அர்ணவம்.

50. द्रुतद्वंद्वं लघुद्वंद्वं भवेत्ताळे कुड्डक्के । ,,

## நிச்சாருகம்

நிச்சா ருகமொருகோல் நேர்பின் விராமமுடன்
இச்சைபெறு மாத்திரையி ரண்டேகால்—கச்சை
வென்றத்தை யேநிரப்பும் ஏந்திளங்கொங்
கைத்திருவே!
ஐம்பத்தொன் றுந்தாள மாம். 51

| ) மாத்திரை உவ

## கிரீடை

சொல்லுங் கிரீடை சுழியீர்வி ராமமொன்று
செல்லுமொன்றே கால்மாத் திரையேயாம்—
வல்லசக்ர
வாளம் பரவுகும்ப மாமுனிஐம் பத்திரண்டு
தாளமென்று சாற்றுந் தகை. 52

o ல மாத்திரை கவ

---

51. लघुद्वंद्वं विरामान्तं ताले निःसारुकाभिधे । -அர்ணவம்.

அத்தை - அதனை.

52. द्रुतद्वंद्वं विरामान्तं क्रीडाताले प्रकीर्तितम् । ,,

சக்ரவாளம் பரவு கும்பமா முனி - சக்ரவாள கிரியில் உள்ளாரும் வணங்குகின்ற அகத்தியர்.

## திரிபங்கி

சாற்றும் திரிபங்கி தாளம் லகுவொன்றே
ஏற்றும் யகணம் இசையுமே—போற்றுலகில்
தோன்றுறு மாத்திரையே தோகாய்!கேள் ஐம்பத்து
மூன்றாகும் தாளம் மொழி. 53

| |·ட ட மாத்திரை ௬

## கோகிலப்பிரியன்

நற்கோ கிலப்பிரியன் நாட்டுசிலை அம்புபணி
சொற்கூற்று மாத்திரையே தோன்றுமாம்—
பொற்புறவே
வீறுண்ட கும்பமுனி விளம்பினான் இவ்வாறு
ஆறென்ப தாம்தாள மாம். 54

ட | ௨ மாத்திரை ௬

---

53. सकाराद्गुरुणैकेन त्रिभंगिरभिधीयते । -அர்ணவம்.

54. कोकिलेप्रियतालेस्यात्क्रमाद्गुरुलंघुप्लुताः । ,,

வீறுண்ட - பெருமைபெற்ற.

## ஸ்ரீ கீர்த்தி

திருகீர்த்தி தாளம் திகழ்தகணம் கோலே
அறுமாத் திரைஎன் றருளக்—குறுமுனிவன்
இன்பத் துடனே இயம்பினன் இப்புவியில்
அன்பத்தஞ் சாந்தாளம் ஆம். 55

ட ட | | மாத்திரை சு

## விந்துமாலி

விந்துமா லிக்குவரும் வில்காற் சுழிவில்லே
அந்தமுறு மாத்திரையே ஆறுகும்—செந்திருவே!
பண்ணேழும் வல்ல பரவுகும்ப மாமுனிசொல்
எண்ணேழு தாளம் இது. 56

ட O O O O ட மாத்திரை சு

---

55. श्रीकीर्ति संज्ञकेताळे गुरुद्वंद्वं लघुद्वयम् । -அர்ணவம்.

56. चत्वारो बिन्दवो गुर्वो मध्येस्याद्विंदुमालिनी । ,,

அந்தம் - அழகு.

## சமதாளம்

சமதாளம் அம்பிரண்டு சந்திரனீர் விந்தோடு
அமைமூன்றே கால்மாத் திரையாகும்—
சமையிடத்தின்
முன்புற்ற கும்ப முனி இங் குரைசெய்த
ஐப்பத்தே ழாம்தாளம் ஆம். 57

| | ○ ல மாத்திரை ௩வ

## அபிநந்தனம்

நந்தனமே அம்பிரண்டு நற்சுழிரண் டோர்மின்னே
சிந்தித் தறுமாத் திரைசேரும்—முந்துதமிழ்
மட்டாருங் கும்ப மறைமுனிவன் சொன்னஐம்பத்
தெட்டாகுந் தாளந்தான் இது. 58

| | ○ ○ ஃ மாத்திரை ௬

---

57. लद्वयं द्रुतद्वयं चैव प्लुतगुरुश्चैवनन्दने । -அர்ணவம்.

58. लद्वयं द्रुतद्वयं चैव प्लुतश्चैवाभिनन्दने । -அர்ணவம்.

மட்டு ஆரும் கும்பம் - அமுதகும்பம்.

## ஸ்ரீநந்தனம்

மதிகுருவில் ஒன் றிரண்டு வாய்த்த துருதம்
அதிலொருவில் மாத்திரையு மஞ்சே—பொதியமுனி
யென்பதா ராய்ந்ததமிழ் இப்புவியி லேஐம்பத்
தொன்பதாந் தாளம் உரை. 59

ㄣ ○ ○ ㄣ மாத்திரை ரு

## உதியம்

சங்கை யுதியம் சகணமாம் பூங்கமல
மங்கையே! சொல்நாலு மாத்திரையாம்—அங்கம்
குறுகுமா வேதமுனி கோமளமாய்ச் சொன்ன
தறுபதாந் தாளமென்ன லாம். 60

| | ㄣ மாத்திரை ச

---

59. गुर्वो मध्ये द्रुतद्वंद्वं ताले श्रीनन्दनाभिधे । -அர்ணவம்.

60. उद्वीक्षणे लघुद्वंद्वं गुरुरेकस्ततः परम् ।

இதனை உத்வீட்சணம் என்னும் அர்ணவம். அங்கம் குறுகும் - உருவம் குறுகிய. கோமளம் - அழகு.

## அந்திமட்டிகை

செப்புமந்தி மட்டிகையில் சேர்துருதம்
ரண்டதன்பின்
இப்புவிந்து ரண்டங் கிணைலகுவாம்—ஒப்ப
மறுவற்ற கூந்தலாய்! மாத்திரையு மூன்றேகால்
அறுபத்தொன் றாந்தாள மாம். 61

○ ல | | மாத்திரை ௩வ

## இடங்கி

சாருமி டங்கிஎனும் தாளந் தனிரகணம்
பாரிலஞ்சு மாத்திரையே பண்முறையே—
மேருமுலைப்
பாவாய்!கேள் தாளமறு பத்திரண்டா மாமுனிவன்
நாவா லுரைத்த நலம். 62

ட | ட மாத்திரை ௫

---

61. இப்பு எதுகைக்காக அமைத்தசொல்; அசை.

62. ढंकिकाभिधा तालेतु रगणः परिकीर्तितः । -அர்ணவம்.

## வன்னமட்டிகை

வன்னமட்டி கைக்கிணைகோல் வண்துருதம்
ரண்டொருநேர்
மன்னிருகொம் பஞ்சுவரு மாத்திரையே—
துன்னுகுழல்
அன்னமின்னே! ஏழொன்ப தாகுந்தா ளம்பரதம்
பன்னுமுனி வன்சொற் படி. 63

| | ○ ○ | ○ ○ மாத்திரை ௫

* * * * 64

* * * * 65

* * * * 66

* * * * 67

* * * * 68

* * * * 69

---

63. लौ बिन्दुलश्च बिन्दुचवर्ण मट्यतालके । -அர்ணவம்.

## நந்தனம்

வைத்தபெரு நந்தனத்தில் வாளிசுழி கோல்சுழிவில்
சித்திரஞ்சேர் ஐமாத் திரையாகும்
* * * *
ச, னெழுப தாமென்ப தே. 70

| ○ | ○ ⌐ மாத்திரை ரு

## முகுந்தம்

முகுந்தங்கோல் கொம்பிரண்டு முன்கணைவில் லாக
உகந்தளவாய் மாத்திரைஅஞ் சோத—மிகுந்த
வழுவற்ற கும்பத்து மாமுனிவன் சொன்னான்
எழுபத்தொன் றாந்தாள மே. 71

| ○ ○ | ⌐ மாத்திரை ரு

---

71. मुकुंदसंज्ञके ताळे लघुर्बिंदू लघुर्गुरुः । -அர்ணவம்.

உகந்து - விரும்பி. வழு - குற்றம்.

## அன்னியமுகுந்தம்

அருளன்னி யம்முகுந்தம் அம்பொன்று நால்விற்(று)
ஒருவில்லு மாத்திரைஅஞ் தோத—மருவாரும்
பண்ணுண்ட கும்பப் பழமறையோன் சாற்றினான்
எண்ணொன்ப தாந்தாள மே. 72

| ○ ○ ○ ○ ட மாத்திரை ௫

## கந்துகம்

கந்துகமே நாலுசரம் காண்டபம் ஒன்றாகும்
செந்திருவே! மாத்திரை ஆறாகும்—நந்தலில்லா
முத்தமுந் தின்ப மூலமானே! தாளமெழு
பத்தின்மூன் றாகப் பகர். 73

| | | | ட மாத்திரை ௬

---

72. अन्यश्च लकारादि गुर्वन्तं खचतुष्टयम् । -அர்ணவம்.

மருவ ஆரும் பண் - மேற்கொள்ளுதற் கினிய பண்.

73. நந்தல் - கேடு.

## ஏகதாளம்

ஏகதா ளந்துருத மேகவுரை மாத்திரையே
பேர்கமுறு மின்னே! புகலக்கேள்—ஆகமக்குள்
மேலான கும்பமுனி வீறு எழுபத்து
நாலாகும் தாளமென்ன நாடு. 74

O மாத்திரை இ

## பூரணகங்காளம்

பூரணகங் காளம் புனைசுழிநால் விற்கோலாம்
ஏரணியு மாத்திரைஅஞ் சென்னுமே—தாரணியில்
கஞ்சா சனத்தோன்றன் காதலனிப் போதெழுபத்
தஞ்சாந் தாளமென் றான். 75

○ ○ ○ ○ ㄣ | மாத்திரை ரு

---

74. एकेनैव द्रुतेनस्यादेकताळी त्रिसंज्ञके । -அர்ணவம்.

ஆகமக்குள் - ஆகமத்திற்குள்; அத்துச்சாரியை கெட்டது. வீறு - தனிப்பெருமை படைத்த.

75. पूर्णद्रुत चतुष्केन गुरुणा लघुना क्रमात् । -அர்ணவம்.

கஞ்ச ஆசனத்தோன் - தாமரையை ஆசனமாகக்கொண்ட பிரமன். காதலன் - என்றது அவன் மகனாகிய அகத்தியரை.

## கண்டகங்காளம்

கண்டகங்கா ளம்சுழியீர் காண்டீபம் ரண்டாகும்
கொண்டதஞ்சு மாத்திரையா கூறுவார்—
எண்டிசையின்
பேறான கும்பமுனி பேசினான் காணெழுபத்
தாறாந்தா ளந்தா னவை. 76

○ ○ ⊥ ⊥ மாத்திரை. ரு

## விடமகங்காளம்

விடமகங்கா ளம்யகண மென்மாத் திரைஅஞ்(சு)
இடையிழையீர்! கேளீர் இயம்பின்—புடைசூழ
முழுமைக் கடல்குடித்த மூன்முனிவன் சொன்னான்
எழுபத்தே ழாம்தாள மே. 77

। ⊥ ⊥ மாத்திரை ரு

---

76. द्रुतद्वंद्वं गुरुखंडे गुरुद्वंद्वं लघुः समे । -அர்ணவம்.

எண்டிசையின் பேறான - எட்டுத்திசையிலுள்ளார்க்கும் வாய்ப்பான.

77. यकोलघु गुरुद्वंद्वं कंकालेऽत्वसमोभवेत् । -அர்ணவம்.

இடையிழையீர் - நூல் இழை போன்ற இடையினை யுடைய பெண்களே.

## சமகங்காளம்

மெய்ச்சமகங் காளமிகு தகணம் வீறுடனே
அச்சமற மாத்திரையும் அஞ்சதாம்—இச்சைபெறு
கட்டாணி முத்தே கைக்கனியே! ஈதெழுபத்
தெட்டாம் தாளமென எண். 78

ட ட | மாத்திரை ரு

## சதுத்தானம்

சதுத்தானம் வில்ஒன்று தான்துருத மூன்று
முதிர்த்ததமிழ் மாத்திரையு மூன்றரையே—
கதித்தமுனி
என்பதா கப்புவியில் எய்துவித்தான் சொல்எழுபத்
தொன்பதாம் தாளம் உணர். 79

ட ○ ○ ○ மாத்திரை ௩இ

78. கட்டாணி முத்து - கட்டப்பெற்ற நன்முத்து. நல் முத்தை ஆணிமுத்து என்ற வழக்கு.

79. கதித்த - சொன்ன.

## டோம்புளி

பெறுடோம் புளிபின் முக்கோல்பின் னேபுள்ளி
செறிமூன்றே கால்மாத் திரையாம்—குறுமுனிவன்
பண்பதா கப்பகர்ந்தான் பார்மீதி லேமுனிவன்
எண்பதாம் தாளம் என. 80

| | ὶ மாத்திரை ௩வ

## அபங்கதாளம்

அபங்கதா ளம்கோல்பின் நாகமே யாகச்
சிவஞ்சேரு நாலுமாத் திரையே—தவம்புரியும்
தண்பொற் பதகமலத் தாபதன்கும்
போதயன்சொல்
எண்பத்தொன் றாம்தாள மே. 81

| ஃ மாத்திரை ௪

---

80. लघुत्रयं विरामान्तं झोंबजे परिकीर्तितम् । -அர்ணவம்,

பண்பு அதாக - அழகாக. பகர்ந்தான் - சொன்னான். பார் - பூமி.

81. अभंगताळे कर्तव्यं लघोरग्रे त्रिमात्रकम् । -அர்ணவம்.

பொற்பத கமல தாபதன் கும்போதயன் - குளிர்ந்த பொற்றாமரை போன்ற திருவடிகளையுடைய தவத்தோனாகிய அகத்தியன்.

## ராசகங்காளம்

ராசகங் காளம் ரகணம் இருசுழியாம்
ஆசுபெறு மாத்திரை ஆறாகுமே—வாசம்
திரண்டார வார்முலையீர்! சீருலகில் எண்பத்
திரண்டாம் தாளந்தான் இது. 82

ட ᑊ ட ○ ○ மாத்திரை சு

## லகுசேகரன்

லகுசே கரனிலகு விராமங் காணத்
தொகுமாத் திரைஒன்றே கால்தான்--தொகுகருணை
தோன்றார் கலைமுனிவன் சொல்லினன் எண்பத்து
மூன்றாகும் தாளமென முன். 83

ᑊ மாத்திரை கவ

---

82\. रगण बिन्दुयुग्मं च राजगंगालं दृश्यते । -அர்ணவம்.

வாசம், திரண்ட ஆர வார் முலையீர் - மணத்தோடுகூடிய திரண்ட கச்சு அணிந்த முலையினையுடைய மகளிரே.

83\. एक लंघु विरामेण लंघुना लंघु शेखरः । -அர்ணவம்.

தொகு கருணை தோன்று ஆர்கலைமுனிவன் - செறிந்த கருணைதோன்றுகின்ற நிறைந்த கலையினையுடைய முனிவன்.

## துருதசேகரன்

சொல்துருத சேகரனில் தோன்றுவட்டம் விந்தாக
உற்றிடமுக் கான்மாத் திரைஎன்றே—முற்றுலகில்
ஆலாலம் உண்டவர்போ லானமுனி எண்பத்து
நாலாந்தா ளம்மெனச்சொன் னர். 84

ல மாத்திரை ௩

## பிரதாபசேகரன்

சேரும் பிரதாப சேகரனில் மின்ஒன்றே
ஓரும் சுழிரண் டொருவிந்தே—சீருடனே
மாத்திரை நாலேகால் வாழ்தாளம் எண்பத்தஞ்
சேத்திடச்சொன் னன்முனிவ னே. 85

௨ ○ ல மாத்திரை ௪வ

---

84. एकेण सविरामेण द्रुतेन द्रुतशेखरः । -அர்ணவம்.

ஆலாலம் உண்டவர் - விடமுண்ட சிவபெருமான்.

85. அஞ்சு ஏத்திடச் சொன்னன் எனப் பிரிக்க.

## செகற்சம்பை

செகற்சம்பை விற்சந் திரனிரண்டு விந்தொன்(று)
இகற்செறியு மாத்திரையு மூன்றேகால்—
மகத்துவமாய்ப்
பேறான கும்பமுனி பேசினன் எண்பத்
தாறாந்தா ளத்தினடை வாய். 86

ட ○ ல மாத்திரை ௩வ

## சதுமுகன்

சதுமுகன்கோல் விற்கோல் தான்புளுத மாக
அதிகமுறு மாத்திரைஏ ழாமே—விதியயந்து
சூழேழ் கடலுகந்தோன் சொன்னான் இதைஎண்பத்
தேழாகும் தாளந்தான் என். 87

। ட । ௨ மாத்திரை ஏ

---

86. जगज्झंपे गुरुस्त्वेकः विरामान्तं द्रुतद्वयम् । -அர்ணவம்.

மகத்துவமாய் - மேலாக. பேறான - தமிழ்நாட்டின் தவப் பயனான.

87. चतुर्मुखाभिधेताले जगणानन्तरं प्लुतः । -அர்ணவம்.

விதி பயந்து - பிரமனால் பெறப்பட்டு. ஏழ்கடல் உகந் தோன் - ஏழு கடலையும் குடித்தோன்.

## வின்னசதுமுகம்

வின்ன சதுமுகனே வீறுபணி கோலாக
அன்னதொரு மாத்திரைநால் ஆகுமே—
சொன்னதுகேள்
கொட்டாத செம்பொற் குடமுலையீர்! எண்பத்து
எட்டாம் தாளம்தான் இது. 88

௨ | மாத்திரை ச

## திரிமாத்திரிகை

திரிமாத் திரிகை செறிபுலுதம் ஒன்று
அருண்மூன்று மாத்திரை யாக—வருமியல்பாய்ப்
பண்புற்ற வேதமுனி பாரித்தானே இதுவும்
எண்பத்தொன் பதாந்தாள மே. 89

௨ மாத்திரை ௩

---

88. नगपाश्व प्लुताश्चान्य चतुर्मुख समाह्वये । *அர்ணவம்.

கொட்டாத செம்பொற்குடம் - இல்பொருள் உவமை; குடமானல் தன்னுள்ளிருக்கும் பொருளைக் கொட்டுந்தன்மையது; இது கொட்டாதது என்று வேற்றுமை காட்டியபடி.

89. வேதமுனி - வேதங்களையுணர்ந்த முனிவனுகிய அகத்தியன்.

## சம்பை

சம்பை இரண்டுவட்டம் தருவிந்து வாளிஒன்றே
லம்பனையி ரண்டேகால் மாத்திரையே—செம்பொற்
குடமுனிவன் இப்புவியில் கூறினான் இந்த
அடைவுதொண் ணூ றம்தாளம் ஆம். 90

0 ல । மாத்திரை உவ

## பிரதிமட்டியம்

இப்பிரதி மட்டியம் இயற்சகண மேபகணம்
அப்படியே மாத்திரைஎட் டாகுமே—செப்புமுலைப்
பண்ணேற்ற மாமொழியாய்! பாமுனிவன் ஓதினான்
தொண்ணூற்றொன் றம்தாளம் சீர். 91

।। ᒥ ᒥ ।। மாத்திரை அ

---

90. व्योमद्वयं विरामान्तं लंघुझंभाभिधे भवेत् । -அர்ணவம்.

குடமுனிவன் - அகத்தியன். அடைவு - முறை.

91. प्रतिमठ्यतालेतु सभगण परिकीर्तितः । -அர்ணவம்.

செப்பு - கிண்ணம். பண் ஏற்ற - இவள் மொழியின் இனிமை தமக்கின்மையால் பண் இவள் மொழியின் இனிமையை ஏற்றுக்கொண்ட என்பதாம்.

## திருதீயம்

திருதீய தாளம் திகழ்மூன்று வட்டம்
உறும்விந்து மாத்திரையே ஓதப்—பெறுமொன்றே
முக்காலே யாக முனிபகர்தொண் ணூற்றிரண்டு
மிக்கான தாளம் இது. 92

o o ல மாத்திரை க¾

## வசந்தம்

வசந்தம் நகணம் வருமகணம் பேச
உசந்தொருமாத் திரைஎன்ப தாமே—இசைந்ததிரு
பண்ணூற்று வேதமுனி பாராட்டு தாளமிது
தொண்ணூற்று மூன்றே தொகை. 93

| | | ㄴ ㄴ ㄴ மாத்திரை ௯

---

92. तृतीयताले द्रौ लौ च सविराम द्रुतत्रयम् । -அர்ணவம்.

93. वसंतताळे कर्तव्यो नगणो मगणस्ततः । ,,

பண் ஊற்று வேதமுனி - இசைகட்கு இருப்பிடமாகிய அகத்தியர்.

## லளிதம்

வருலளிதம் அம்பொன்று வட்டம் இரண்டாகும்
ஒருவிந்து மாத்திரையே ஓத—இருநிலத்தில்
இரண்டேகா லாகு மியல்முனிதொண் ணூற்றுநால்
உண்டாகும் தாளம் உரை. 94

| ○ ல மாத்திரை உ௩

## இரதிதாளம்

இரதிதா ளத்தின் இயல்வாளி வில்ஒன்று
அரிதுடனே மாத்திரை மூன்ருகப்—பெரிதுணர்ந்து
தண்ணூற் றியகிருபை தாங்குமுனி ஓதினன்
தொண்ணூற்றஞ் சாந்தாளம் சொல். 95

| ⌐ மாத்திரை ௩

---

94. ताले ललिते संज्ञेस्यात् द्रुतद्वंद्वं लघुः परम्।-அர்ணவம்.

இயல் - இலக்கணம்.

95. रतिताले लघुकार्यो गुरुश्चैक प्रकीर्तितः। ,,

தண் ஊற்றிய - குளிர்ச்சியைப் பொழிந்தன.

## கருணையதி

கருணை யதிக்குவட்டம் காணுவது நாலாம்
அருணயந்த மாத்திரை ரண்டாகும்—பெருகு
வருகும்ப மாமுனிவன் வாழ்த்தியது ஓர்தாளம்
வருதொண்ணூற் ருறுகு மாம். 96

0 0 0 0 மாத்திரை உ

## சட்டாளம்

சட்டாளம் சொல்லாறும் சந்திரனே யாகும்
முட்டாது மாத்திரையும் மூன்றாகும்—மட்டுதவு
தண்ணுலவு கும்பமுனி தானுரைத்த தாளந்தான்
எண்ணுவது தொண்ணூற்றே ழென். 97

0 0 0 0 0·0 மாத்திரை ௩

96. ताळे करुणात्याख्ये भवेद्द्रुत चतुष्टयम् । - அர்ணவம்.

அருள் + நயந்த - அருணயந்த.

97. द्रुतैः षड्भिस्तु षट्ताले........ ,,

தண் - கருணை.

## வத்தனை

வத்தனை இரண்டு மதிகோல் பணிஒன்று
அத்திபெறு மாத்திரையும் அஞ்சதாம்—நிர்த்தமிடும்
சங்கரனே யான தமிழ்முனிசொல் தாளந்தான்
இங்கினிதொண் ணூற்றெட்ட தே. 98

O O | ௨ மாத்திரை ரு

## வருணையதி

வருணை யதிக்கு வரும்கோல் இரண்டே
இருபுலுத மாத்திரையும் எட்டே—தருமுனிவன்
சொன்னபடி தாளந்தான் தொண்ணூற்று
ஒன்பதுமே
கன்னியே நீஅறியக் காண். 99

|| ௨ ௨ மாத்திரை அ

---

98. वर्धन द्वौ द्रुतौ लपौ । -அர்ணவம்.

நர்த்தம் இடு சங்கரனேயான கும்பமுனி என்றது - பூரத சாஸ்திரத்திற் சங்கரனை ஒத்த அகத்தியர்.

99. वर्णायत्यभिधेताले लघुद्वंद्वं प्लुतद्वयम् । -அர்ணவம்.

## ராசநாராயணன்

ராசநா ராயணனே ரண்டுசுழி கோல்ரகணம்
தேசே ழுமாத் திரைஎன்றே—வீசுபுகழ்
பொற்கும்ப வேதன் புகன்றான் இப் பூமிதில்
அற்புதநா ளும்தாள மே. 100

○ ○ ! ⌐ | ⌐ மாத்திரை எ

## மதங்கம்

மதங்கம் ஒருவில் மதி இரண்டே யாகும்
இதம்பெறவே மாத்திரைமூன் றென்னும்—
விதம்பெறவே
ஓதினன் கும்பமுனி உண்மையுட னேதாளத்
தீதிலாநூற் றென்றதே. 101

⌐ ○ ○ மாத்திரை ௩

---

100. राजनारायणे विंदुद्वयं जगणो गुरुः । -அர்ணவம்.

101. गुरुश्चैको द्रुतद्वंद्वं मदनो परिकीर्तितः । ,,

இதம் - நன்மை. தீதிலா - குற்றமற்ற.

## பார்ப்பதிவிலோசனம்

பார்ப்பதிவி லோசனமே பாரசுழி ஈர்கோல்
ஈர்கண் தகண நகணமே—சேர்பகண
மேமாத் திரைபதினு றென்றுமுனி செப்பியது
ஆமேநா னூற்றிரண்ட தாம். 102

○ ○ | | ○ ○ ⏗ ⏗ | | | | ⏗ | | மாத்திரை கரு

## விற்புரம்

விற்புரமே சொல்வில் மிகுமகணம் கோல்விழி
சொற்பெறு வில்ரண்டு சுழியிரண்டாம்—
அற்புதஞ்சேர்
பன்னிரண்டும் ஓரரையும் பாமுனிவன் சொல்தாளம்
இந்நிலையில் நூற்றுமுன் றே. 103

⏗ ⏗ ⏗ | ○ ⏗ ⏗ ○ ○ மாத்திரை கஉஇ

---

102. पार्वती लोचने द्रुतौ लौ द्रुतौ तनभः क्रमात् ।
-அர்ணவம்.

சேர் பகணமே மாத்திரை என்பது வகையுளிபெற்று சேர்பகண மேமாத்திரை என்றாயிற்று.

## காருதி

காருதிதான் நாற்சுழிபின் காணும்விந் தொன்றுகும்
வார்முலையி ரண்டேகால் மாத்திரையாம்--சீருடனே
செப்பரிய கும்பமுனி செப்பியதோர் தாளந்தான்
இப்புவியில் நூற்றுநா லே. 104

௦ ௦ ௦ ல மாத்திரை உவ

## சீநந்தனம்

சீநந்த னம்பகணம் சேர்பணிஒன் றாகவே
யானந்த மாத்திரைஏ ழாகுமே—நானம்
திகழ்சடைக்கும் போதயனார் செப்பியதோர் தாளம்
மிகவுறு நூற்றஞ்ச தே. 105

ட ǀ ǀ ஊ மாத்திரை எ

104. गारूभि कथ्यते प्राज्ञैः विरामान्तं चतुर्द्रुतम् ।

-அர்ணவம்.

105. श्रीनन्दने भकारश्च प्लुतश्च परिकीर्तितः । ,,

திகழ்சடைக் கும்போதயனார் - விளங்குகின்ற சடையினையுடைய அகத்தியர்.

## ஜயம்

இச்சையார் முற்சயமே இன்ஜகணம் ஈர்சுழியின்
மச்சவிழி எட்டே மாத்திரையா—மெச்சுபுகழ்
செம்பொற் குடமுனிவன் செப்பினன் தாளமிது
பம்பியநூற் றாறதே பார். 106

| ட | ○ ○ ௨ மாத்திரை ௮

## லீலை

விளலீலை கொம்பம்பு மென்துருத மின்னும்
வளமாத் திரைஅஞ்சே வாங்கும்—இளையாத்
தமிழ்முனிவன் சொன்னதொரு தாளமே வாசம்
கமழ்நூற்றே ழென்றாரே காண். 107

○ | ○ ௨ மாத்திரை ௫

106. जयस्य जगणो बिंदुयुग्मं प्लुतस्ततः । -அர்ணவம்.

பம்பிய - நிறைந்த.

107. लीलाताळे खलोपश्च लोगौ खौपौ लौकिते । ,,

## விலோகிதம்

விலோகிதம் கோல்விற்சுழியீர் மின்னென்றும்செய்த
புலமிசைஏழ் மாத்திரையே பொங்கும்—கலாவதிரு
நீறிட்ட வேணிமுனி நிருமித்த தாளந்தான்
நூறெட்ட தென்றோது வார். 108

| ப ○ ○ ഉ மாத்திரை எ

## லளிதப்பிரியன்

லளிதப் பிரியன் லகுவீர் ரகணம்
எழில்பெற்ற மாத்திரைஏ ழாகும்—தெளியும்
கலைமுனிவன் சொன்ன கவினேங்கு தாளம்
அலைவிலா நூற்றென்ப தாம். 109

| | ப | ப மாத்திரை எ

108. கலாவ திருநீறிட்ட வேணி - விளங்கத் திருநீறுபூசிய சடை.

109. ललित प्रियतालेस्यात् सगणानन्तरं लगौ । - அர்ணவம்.

கவின் - அழகு. அலைவிலா - வழுவாத.

## சனகதாளம்

சனகதா ளந்தான் நயசகணம் சாரும்
இனியதனு மாத்திரை ஈரேழே—வனையும்
மறைமுனிவன் சொன்ன வகைத்தாளந் தானே
வரையினாற் றுப்பத்த தாம். 110

| | | | ↓ ↓ | | ↓ ↓ மாத்திரை கச

## லக்ஷ்மீசன்

அணியும் லக்ஷ்மீசன் கோலம்பின் ஈர்விண்
அணிவிந்து நாகம் வருமே—தனியா
தறமேவு மாத்திரையே ஆறேகால் தாளம்
உறுமேநாற் றுப்பதினென் றும். 111

| | ○ ல ꠲ மாத்திரை கூவ

110. जनकाभिधताळेच नयसास्तत्परंगुरुः । -ஆர்ணவம்

வரையின் - அளவுபடுத்தின்,

111. बिंदुत्रयम विरामांतं लक्ष्मीशे लौ प्लुतौ तथा । ,,

## இராவர்த்தனை

இராவர்த் தனைமுதியி ரண்டாம் விந்தொன்று
பராவும் அரவொன்றே படியும்—தராவலைய
மாத்திரை நாலேகால் வருநூற்றுப் பன்னிரண்டும்
சாத்திய தாளமிதே காண். 112

ʘ ல ஊ மாத்திரை சுவ

## பெத்தாபரணம்

பெத்தா பரணம் பிறங்குகலை மின்கோலே
தித்தாவி மாத்திரையும் அஞ்சே—முத்தாலந்
தோன்று முனிதாளம் சொல்நூற்றுப் பத்துடனே
மூன்றும் முகிந்தது முற்று. 113

। ஊ । மாத்திரை ரு

---

112. சாற்றிய எனற்பாலது எதுகைநோக்கிச் 'சாத்திய' ஆயிற்று.

113. भद्रबाणस्तु कथितो लघ्वो मंध्ये प्लुतंभवेत् ।
-அர்ணவம்.

முத்தாலம் தோன்று முனி - மூவுலகும் புகழ்பெற்ற அகத்தியர்.

## தற்சிறப்புப்பாயிரம்

பரகுண மாமுனிவன் பகர்ந்த சூத்திரத்தை
வரகுண ராமன் வகுத்தே—திரமுறவே
வெண்பா எனவுரைத்தான் வேதர்கோ னிப்புவியில்
பண்பாக வேபடித்துப் பார்.

குருவாழ்க.